நாடினேன்.. நம்பினேன்...
அனைவருக்கும் எனது நன்றி..
இதுவரை என்னுடைய கதைகளை.. கதைகளாக பாவித்து படித்து உங்கள் கருத்துக்களையும் விமர்சனங்களையும் தந்த அனைவருக்கும் நன்றி..
என்னுடைய அடுத்த கதை.. நாடினேன்.. நம்பினேன்...
நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் ஒருமுறையேனும் சந்திக்கும் ஒரு நிகழ்ச்சி தான் இந்த கதை.. உங்கள் கருத்துக்களும் விமர்சனங்களும் எங்களை இன்னும் மெருகேற்றும்..

நன்றி..'
ராகவன்,
**கடந்த இருமாதங்களில் கார்த்திக் சந்தோஷப்பட்ட ஒரே க்ஷணம் இதுவாக தான் இருக்கும். அந்த க்ஷீனத்திலும் அவனுள் ஒரு புது தெம்பு வந்தாற்போல ஒரு உணர்வு. கார்த்திக் கதவை மூடியபின். மெதுவாக சென்று கொண்டிருந்த அமுதன்.. கட கடவென ஓடி மேல் வீட்டிற்கு.. அங்கு சென்று கார்த்திக்கின் உடல் நிலையை பற்றி அறிந்து கொண்டு.. ஏதேனும் அவசரம் என்றால் தன்னை தொடர்பு கொள்ள சொல்லி தன்னுடைய எண்ணை கொடுத்துவிட்டு வேகமாக சென்றான். வழியில் ரூபனை தொடர்பு கொண்டான். இப்பொழுது அழைப்பு சென்றது. ஹாய் செல்லம்.. சாரி டா என்னோட போன் கீழே விழுந்துவிட்டது.. கடைல போய் சரி பண்ணிட்டு வந்தேன்.. சரி சாப்பிட போகும் போது கூப்பிடலாமேன்னு தான் இருந்தேன். அதுக்குள்ளே நீ கூப்பிட்டுவிட்டே... பரவாயில்லை ரூபன்.. நேத்து ராத்திரியே கூபிடுவேன்னு பார்த்தேன். காலைலேர்ந்து ட்ரை பண்ணறேன். இப்பதான் கிடச்சுது... அமுதன்.. சாயந்திரம் நான் உங்க ஆபீஸ்க்கு வரேன் ரெண்டு பேரும் ஒண்ணா டின்னெர் போகலாம்.... இல்ல ரூபன்.. எனக்கு இன்னிக்கு ஓவர் டைம் இருக்கு.. நான் உனக்கு போன் பண்ணறேன்.. சாரி டா.. வீட்டுக்கு கிளம்பும் பொழுது போன் பண்ணறேன்.. ஓகே வா.. ஓகே டா செல்லம்.. சரி நானும் சாப்பிட போறேன்.. ஓகே பாய்.... அழைப்பை துண்டித்துவிட்டு... ரூபன்.. இப்பகூட நீ உண்மையை சொல்லல பாத்தியா? உன் வாயாலேயே சொல்லவெக்கறேன் பாரு... உன்னை உண்மையா நேசித்த கார்த்திக்கையும் ஏமாத்திட்டே.. உன்னையே நம்பி வந்த என்னையும் ஏமாத்திட்டே.. காலம் வரும் ரூபன்.. அதுவரை நீ உன் விளையாட்டை விளையாடு... என்று எண்ணிக்கொண்டே.. துரையை அழைத்தான். துரை நான் உன்னை சந்திக்கணும்.. முடியுமா? இன்னிக்கு இரவு.. 8 மணிக்கு.. எனக்கு 2 ஹெர் ஓவர் டைம் இருக்கு முடிச்சிட்டு வரேன்.. ஆனா கண்டிப்பா நான் உன்னை இன்னிக்கு பாக்கணும். என்ன அமுதன் ஏதாவது அவசரமா? அவசரம்னு இல்ல.. ஆனா முக்கியமானது.. ஒரு உதவி வேண்டும். அது தான். உன்கிட்டே வண்டி இருக்குல.. என்ன பிக் அப் பண்ண முடியுமா? அப்பறம் என்னோட இன்னொரு பிரண்டும் வருவார். பரவாயில்லையா? பரவாயில்லை அமுதன்.. கண்டிப்பா வரேன்... சரி அமுதன் சாயந்திரம் பார்க்கலாம்.. பாய்.. ..அடுத்த அழைப்பு நிரஞ்சனுக்கு... முதல் முறையாக அமுதனிடமிருந்து அழைப்பு வர மகிழ்ந்த நிரஞ்சன்.. அமுதன் சொன்னதற்கு சம்மதம் தந்து 8 மணிக்கு சந்திப்பதாக கூறினான்... மூவரும் 8 மணிக்காக காத்திருந்தனர்...**
ஆர்குட்டில் ஒரு விளம்பரம்..
லாங் டெர்ம் பிரண்ட் தேவை.. என்னுடைய வயது 22 ஐந்து அடி 9 அங்குல உயரம்.. சிவந்த நிறம்.. ஒல்லியான தேகம்.. ஓரிரவு உறவுகளில் எனக்கு உடன்பாடு இல்லை.. ஒரு நல்ல நண்பனும் என்னை புரிந்து கொண்டும் நான் அவனை புரிந்து கொள்ளும்படியான ஒரு நபரை நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.. வயது பிரச்சனை இல்லை.. ஆனால் பார்ப்பதற்கு இளமையாக இருக்கவேண்டும். இருப்பினும் என் தேடல் (20 முதல் 25 வரை).. என்னுடைய மின்னஞ்சலில் தொடர்பு கொள்க..
ஆவலுடன் எதிர்பார்க்கும்.... உங்கள் அமுதன்..

பலர் அதை பார்த்தாலும் ஒருசிலரே அதை கொஞ்சமாவது பரிசீலித்தார்கள்.. ஆம்.. நிராகரித்தவர்கள் எல்லோரும் யாராலாவது என்றோ ஒருநாள் நிராகரிக்கப்பட்டவர்கள்.. இருப்பினும் வாழ்க்கையின் வலிமிகுந்த அந்த பாடத்தை அமைதி என்னும் விலை கொடுத்து கற்றுக்கொண்டவர்கள்..
இதை யாரேனும் சென்று சொன்னால் ஏற்றுக்கொள்ளும் மனபக்குவமோ மனவலிமையோ இந்த தேடலில் இருப்பவர்களுக்கு இல்லை என்பது யாரும் மறுக்க முடியாத முடியாத ஒரு உண்மை. ஆம் நம் அமுதனும் அந்த வகை தான். காமத்துப்பாலில் தன விருப்பம் என்னவென்று அறிந்து கொண்ட நாள்முதல்.. அவனுடைய தேடல் தொடங்கியது.. யாருடன் பேசும் பொழுதும் சரி பழகும் பொழுதும் சரி.. அவன் தன் ஆதங்கத்தில் ஏதேனும் சொல்ல அந்த உறவு இன்று வரை சிலநேரம் ஓர் இரவு.. சில நேரம் சில தினங்கள் என அவன் உணர்வுகளை வதைதத்துதான் அதிகம்..இந்த விளம்பரம் அவனுடைய தேடல் படலத்தின் தொடர்ச்சி..
ஐந்து ஆறு நபர்கள் தங்கள் சம்மதத்தை தெரிவித்து பதில் அனுப்பி இருந்தார்கள்.. அதில் ஒருவன் நம் ரூபன் மற்றொருவன் ஆனந்தன். இருவருக்கும் வயது 23 . தாங்களும் அதே தேடுதலில் இருப்பதாகவும் சந்திக்க விரும்புவதாகவும் கூறி அனுப்பிய அந்த பதில் நம் அமுதனை கவர்ந்தது. மற்றோ பதிலோ.. 30 வயதான நிரஞ்சன். ஒவ்வொருவரும் தங்களை பற்றி கூறியவைகளை அலசி ஆராய்ந்து முதலில் ரூபனை சந்திக்க நம் அமுதன் விழைந்தான். அந்த வார இறுதியில் சந்திப்பதாக கூறி பதில் அனுப்பி அவனுடைய தொடர்பு விவரங்களை கேட்டிருந்தான். ரூபனும் பதில் அனுப்ப அந்த சனிக்கிழமை மாலை 4 : 30 மணிக்கு கொட்டிவாக்கம் கடற்கரையில் சந்திக்க முடிவு செய்தனர்.. அங்கு..
மாலை 4 : 30 மணி. அந்த நீண்ட நெடும் குட்டி சுவற்றில் உட்கார்ந்திருந்தான் அமுதன். ரூபனை பார்க்கபோகிற ஆவல்.. யார் அவன்? எப்படி இருப்பான்? இவனாவது நம்மை புரிந்துகொள்வானா? கவுளே! என்தேடல் எப்பொழுது முடியும்? இந்த எண்ணங்களில் மூழ்கிய அவன் ஒரு வாலிபன் தன்னை கூர்ந்து கவனிப்பதை உணர்ந்து கொண்டு.. அவர்கள் சொல்லிக்கொண்ட அந்த அடையாளத்தை காட்ட, அந்த வாலிபனிடமிருந்து எந்த பதிலும் இல்லாததால் தன் காத்திருக்கும் பணியை தொடர்ந்தான். 15 நிமிடங்கள் கழித்து.. அவனை கடந்த ஒருவன் ஏதோ செய்கை செய்ய.. அமுதன் அவனை நோக்கி ரூபன்.. ரூபன்.. அந்த இளைஞன் நின்றான். அமுதன்.. சாரி டா. கொஞ்சம் நேரமாகிவிட்டது.. என்று சொல்ல.. பரவாயில்லை ரூபன்.. வாங்க உள்ளே போகலாம் என்று இருவரும் கடற்கரையில் அலை அடித்து ஈரமாகிய இடத்திற்கு ஒருஅடி மேலே சென்று அமர்ந்த்தனர் எதிர் எதிரே.. கொஞ்சநேரம் இருவரும் மணலை பார்த்துக்கொண்டும்.. அளைந்துகொண்டும் இருந்தனர்.. கண்ணோடு கண்ணோக்க ஏன் இந்த தயக்கம் இருவருக்கும்.. காரணம் இல்லாமலில்லை.. யார் முதலில் ஆரம்பிப்பது.. என்பதில் ஒரு போட்டி. நம் அமுதன் விட்டுக்கொடுத்தான். சொல்லுங்க ரூபன்.. எப்படி இருக்கீங்க? என்ன பண்ணறீங்க? எல்லாவற்றிற்கும் மேலாக என்னை உங்களுக்கு பிடித்திருக்கிறதா? அதாவது.. என்னுடைய அப்பியரன்ஸ்... எதுவாக இருந்தாலும் நேரிடையாக பேசலாம் ரூபன் என சொல்ல... உனக்கென்ன அமுதன் நீ ஹான்ட்சம்மா இருக்கே.. உனக்கு தான் என்னை புடிச்சிருக்க இல்லையான்னு தெரியல என்று எல்லோரும் போடும் ஒரு பிட்டை தானும் போட்டான்.. யு ஆர் லுக்கிங் கிரேட்.. எனக்கு உங்களை புடிச்சிருக்கு ரூபன். சொல்லுங்க.. என்று சொல்ல.. மேலும் இந்த அப்பியரன்ஸ்ல எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது என்று பொய் சொல்ல விரும்பவில்லை.. உண்மையிலேயே எனக்கு உங்களை புடிச்சிருக்கு.. என.. தாங்க்ஸ் அமுதன்.. என்னுடைய சொந்த ஊர் கோவில்பட்டி. இங்க ஒரு சாப்ட்வேர் கம்பெனில வேலை பண்ணறேன். ஆனா என்னுடைய மொத்த குடும்பமும் இப்ப இங்க வந்தாச்சு... உன்ன பத்தி சொல்லு அமுதன்...
என்னை பற்றி சொல்லனும்னா.. இப்ப ஒரு பி பி ஒ கம்பெனில வேலை செய்யறேன். வீடு மேடவாக்கம்.. அப்பா அம்மா ஒரு தங்கை.. அவ்வளவுதான்.. சரி நீங்க ஒரே "சன்"னா?
இல்லை அமுதன் எனக்கு இரண்டு சகோதரிகள்..அக்காக்கு கல்யாணம் முடிந்துவிட்டது.. தங்கை

படிக்கிறாள்
.. ஒ.. ரூபன் ஒரு கேள்வி.. உங்களோட உண்மையான தேடல் என்னன்னு நான் தெரிஞ்சிக்கலாமா? ஏன்னா நாம ரெண்டு பேரும் தேடறது ஒண்ணா இருந்தா தான் நாம தொடர்ந்து பழகறதிலே ஒரு அர்த்தம் இருக்கும்..அது தான் கேட்டேன்.. இந்த கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத ரூபன்.. என்ன அமுதன்.. இப்படி கேட்டுட்டீங்க? என்னுடைய வாழ்க்கையில் கடைசிவரை என்கூட வர ஒரு துணையை தேடறேன்.. எந்த கஷ்டம் வந்தாலும்... நஷ்டம் வந்தாலும் ரெண்டுபேரும் ஒண்ணாவே இருக்கணும்..விட்டுக்கொடுத்து போகணும்.. ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்ளனும்.. எல்லாத்துக்கும் மேல உண்மையா இருக்கணும்.. என ஆவேசம் வந்தவன் போல சொல்லிமுடிக்க.. எல்லாவற்றையும் வாயைதிறந்தவாறே கேட்டுக்கொண்டிருந்த அமுதனுக்கு ஒரே ஆச்சர்யம்.. அதெப்படி.. என்னுடைய மனதில் உள்ளவைகளை ஒன்று விடாமல் இப்படி சொல்ல முடிகிறது இவனால்? என ஆச்சர்யத்தில் மூழ்க.. அமுதன்.. அமுதன்.. என்ன ஆச்சு..என அவனை உலுக்க.. ஒன்னும் இல்ல ரூபன்.. ஏதோ நினைவுகள்.. எப்பொழுதும் காணும் கனவுகள்.. ஒரு கேள்வி ரூபன்.. கேள் அமுதன்.. இதுக்கு முன்னால் நீ யாரையாவது நேசித்திருக்கிறாயா? அல்லது யாரேனும் உங்களை யாரேனும் நேசித்திருக்கிறார்களா? ஒரு சிறு மௌனம்.. அமுதன்.. முதல்ல நீங்கன்னு கூப்பிடறத நிறுத்து.. நான் ஒண்ணும் கிழவன் இல்லை.. சரி உன்னுடைய இந்த கேள்விக்கு பதில்.... ".............." இல்லை அமுதன்.. இதுவரை என்னுடைய வாழ்வில் யாரும் வந்தது கிடையாது..
ஏதோ துணுக்குற்றவனாய் ... அப்பா உங்களுடைய ஸ்க்ராப்ல வர அந்த கார்த்திக் யாரு என கேட்க.. சிறிதே அதிர்ச்சியில் உறைந்தவனாய்.. அமுதன்.. நான் அவனை பார்த்தது கூட கிடையாது.. யாரவது ஸ்க்ராப் பண்ணினால் நானும் ரிப்ளை பண்ணுவேன் அவ்வளவுதான்... ஆனால் ரூபனின் இந்த பதில் எந்த அளவு அமுதனை திருப்திபடுத்தியது என்பது நமக்கு தெரியாது...தன்னுடைய முகத்தில் சிறிதே புன்சிரிப்பை படரவிட்டு அமுதன் ரூபனை நோக்கி.. எல்லாம் சரி ரூபன்.. இப்ப உங்களை சாரி சாரி .. உன்னை வீட்டுல கல்யாணம் பண்ணிக்கசொன்னா என்ன பண்ணுவே? ....
ஒரு நீண்ட மௌனத்திற்கு பிறகு.. அமுதன்.. என்னால் முடிந்தவரை நான் அதை தடுக்கப்பார்ப்பேன்.. அப்படி ஒரு நிலை வந்தால் என்னுடைய தோழன் யாரோ அவனிடம் கலந்து பேசி ஒருமுடிவெடுப்பேன்.. என சொல்ல.. சரி ரூபன்.. நீங்கள் என்னிடம் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டி இருக்கிறதா? உனக்கு எப்படி அமுதன்? யாராவது......? இல்லை ரூபன்.. எல்லாம் ஓரிரவு கதை தான்.. யாரும் இல்லை.. அதனால் தான் இந்த தேடலே..என்றவன்.. சரி ரூபன் அப்படியே ஒரு வாக் போகலாமா என்று கேட்க..இருவரும் அந்த ஈரமணலில் தங்கள் பாதசுவடுகளை பதித்தவாறே நடந்தனர்.. ஆனால் அந்தசுவடுகளை அலைநீர் அழிக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தாலும் எண்ணங்களோ ஏதோ சுவடுகளை விட்டு செல்லவது போல இருவரும் பார்த்துக்கொண்டே நடந்தனர்.. இருவர் குரலிலும் ஒரு ஆனந்தம் தெரிந்தது.. அதே சந்தோஷத்தோடு வீடு திரும்பினர்.. ரூபனும் மிகுந்த சந்தோஷத்தோடு காணப்பட்டான். வீட்டை நெருங்கும் முன்பே அவனுடைய தொலைபேசி ஒலித்தது.. எடுத்து பார்த்தான்... அது கார்த்திக்.. அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிட்டான்.. இரண்டு முறை.... மூன்று முறை... மீண்டும் மீண்டும் வரவே.. பொறுமை இழந்து தன் தொலைபேசியை சுவிச் ஆப் செய்தான்.. நேராக வீடு செல்லாமல் கொஞ்சம் நேரம் கழித்தே வீட்டை அடைந்தான்.. சோதனையாய் கார்த்திக் வாசலிலேயே அமர்ந்திருந்தான்...கார்த்திக்கின் கண்களில்.. கோவம்.. ஆதங்கம்.. அழுகை என எல்லாம் பொங்கிவர.. ரூபன் என்ன செய்வதென்று யோசிப்பதற்குள்.. என்ன ரூபா..என்ன ஆச்சு... ஒரு கால் கூட எடுக்க முடியாம அப்படி என்ன பண்ணிண்டு இருந்தே.. நீ வேலையா இருக்கும் பொழுது நான் ஏதாவது சொல்லி இருக்கேனா? அப்பறம் ஏன் இப்படி பண்ணினே? ... பாட்டரி சார்ஜ் தீர்ந்து போயிடிச்சு டா.. அதனால் தான் எடுக்க முடியல.. சாப்பிட்டாயா? வா முதல்ல போய் சாப்பிடலாம் மத்ததெல்லாம் அப்பறம் பேசலாம் என்று சமாதானம் கூறி கார்த்திக்கை உள்ளே

அழைத்துக்கொண்டு சென்றான்...கார்த்திக் யாருன்னு பாக்கறீங்களா.... கார்த்திக் ரூபனுடைய சொந்த ஊர்ல அவங்க வீட்டு பக்கத்து வீடு பையன்.. இவர்கள் உறவு சின்ன வயசிலிருந்தே.. அதாவது.. வயசுக்கு வந்தது முதல்.. ரூபனின் குடுப்பம் இங்கே வந்தபின்.. கஷ்டப்பட்டு வேலை தேடி அவனும் சென்னை வந்தான்.. ரூபனின் வீட்டிலிருந்தே அவன் வேலைக்கு சென்று வந்தான்.... இருவரும் ஈருடல் ஒருயிராய் வாழ்ந்துவந்தனர்... ஆம் இப்பொழுது இது இறந்த கால நிகழ்ச்சியே....

ரூபனின் இந்த முதல் மாற்றம் கார்த்திக்கின் மனதில் பேரலைகளை உண்டாக்கியது..

ரூபன் ஏன் இவ்வாறு செய்யவேண்டும்? யாருக்கு தெரியும்..சொல்லப்போனால் அவனுக்கே கூட தெரியாது எனலாம். அன்றிலிருந்து ரூபன் கார்த்திக்குடன் பேசுவது பார்ப்பது எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க நினைத்தான். இந்த நினைப்பெல்லாம் அமுதனை சந்தித்த அன்றே.. சரி வீடு சென்ற அமுதன் ஆனந்தனுக்கு மின்னஞ்சல் அனுப்பி ஞாயிற்றுக்கிழமை மரீன கடற்கரையில் காந்தி சிலை அருகில் மாலை 4 : 30 மணிக்கு சந்திப்பதாக சொல்ல ஆனந்தனும் சந்திப்பதாக உறுதிப்படுத்தினான். நண்பனை பார்க்க போவதாக கூறிவிட்டு அமுதன் காந்திசிலை அருகே சென்றான்.. அங்கே இருவர் அமர்ந்திருந்தனர்.. அதில் ஒருவன் அடையாளத்தை பார்த்தல் ஆனந்தன் போல இருந்தது.. கைகளினால் சமிக்ஞை செய்ய.. அவனும் செய்ய.. அமுதன் அருகே சென்று.. அறிமுகபடுத்திக்கொண்டான். கூட இருந்தவன் தன்னை துரை என்று அறிமுகபடுத்திக்கொண்டான். ஆனந்தின் இந்த செய்கை அமுதனுக்கு பிடிக்கவில்லை இருந்தும் சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்பினான்.. உண்மையை சொல்லவேண்டும் என்றால் ஆனந்தைவிட துரையை அமுதனுக்கு பிடித்தது எனலாம். அவனிடமிருந்தும் தொலைபேசி என்னை வாங்கிகொண்டு வீடு சேர்ந்தான். இந்த இரண்டு நாட்களில் அவன் சந்தித்த யாரும் அவனை அந்த அளவு திருப்தி படுத்தவில்லை என்பது அவனுடைய முகத்தை வைத்தே சொல்லலாம். ஏதோ ஒரு நினைவில் ஏதோ ஒரு நதியில் அவன் இறங்கிக்கொண்டிருப்பதாகவே அவனுக்கு தோன்றியது.. கண்களை மூடினான்.. அது உறக்கமும் இல்லை மயக்கமும் இல்லை.. ஆனால் அவன் இவ்வுலகில் இல்லை.. அந்த நதியில் நீரடிக்கொண்டிருந்தான்.. யாரது.. தெரியவில்லையே.. இதற்க்கு முன்பு பார்த்ததில்லையே.. இருந்தும்... எப்படி.. அவன் கனவில் அவன் பார்த்த அந்த நபர் யார்?

சட்டென்று யாரோ தொட விழித்தவன் அருகே அவனுடைய ஒரு பழைய நண்பனை சந்தித்தான்.. வழி நெடுக பேசிக்கொண்டே வந்தனர்.. அமுதன் இறங்க..விடைபெற்றுக்கொண்டு நகர்ந்தான்.. திடீரென்று தொலைபேசி ஒலிக்கவே எடுத்துப்பார்த்தால் அது ரூபன்... வீடு சென்று சேரும்வரை பேசிக்கொண்டிருந்த அமுதன்.. வீட்டை அடைந்ததும் பிறகு பேசுவதாக கூறி தொடர்பை துண்டித்தான். ரூபனின் இந்த அழைப்பு ஒருவித நல்ல என்னத்தை அமுதன் மனதில் உண்டாக்கியது... இருந்தும் அமுதன் மனதில் குழப்பம்.. திடீரென்று ஒரு கலக்கம்.. தான் செய்வது சரியா? தவறா? யாரை நம்புவது? என்னுடைய தேடல் உண்மையா? நிறைவேறுமா?

இல்லை நானும் வஞ்சிக்கப்படுவேனா? குழப்பம் அதிகமாகியது.. உண்மையை சொல்லவேண்டும் என்றால் அவன் மேலே அவனுக்கே வெறுப்பு வந்தது.. கட்டுபடுத்திக்கொண்டான்.. வீட்டிற்கு சென்றதும் தன தங்கையுடன் சிறிது நேரம் விளையாடிவிட்டு படுக்க சென்றான்.. உறக்கம் வரவில்லை.. இருந்தும் கண்கள் மூடின.. ஆம்.. எல்லாம் ஒரு நப்பாசை தான்.. மீண்டும் அந்த காட்சி வருமா என்று.. வெகு நேரம் முயன்றும் வரவில்லை... ஆயினும் நித்திரா தேவி அவனை ஆட்கொண்டாள்..

மறுநாள் அலுவலகத்திற்கு கிளம்பினான்... அலுவலக வண்டி வந்தது.. ஏறி அமர்ந்தானோ இல்லையோ.. ரூபனின் அழைப்பு.. இருவரும் பேசிக்கொண்டே வந்தனர்.. உள்ளே செல்லும் முன்பு அமுதன் அழைப்பை துண்டித்தான்.. மீண்டும் உச்சிவேளையில்.. மீண்டும் மாலையில் என ரூபனிடமிருந்து தொடர்ந்து அழைப்புகள்... அப்படி என்ன பேசினார்கள் என்று தெரியாது.. ஆனால் பேசிக்கொண்டே இருந்தனர்.. ரூபனின் வார்த்தைகள் அமுதனுக்கு இனிக்க ஆரம்பித்தது.. அங்கே கார்த்திக்கின் வார்த்தைகள் அவனுக்கு கசக்க ஆரம்பித்தது. கார்த்திக்கை பார்ப்பதை கார்த்திக்கிடம் பேசுவதை தவிர்க்க ஆரம்பித்தான். இந்த திடீர் மாற்றத்தால் நிலை குலைந்தான் கார்த்திக். நான் என்ன தவறு செய்தேன்? எதற்க்காக ரூபன் என்னை விட்டு விலகுகிறான்? ஏதும் புரியாமல் திண்டாடினான் கார்த்திக். எந்த காரணமும் இல்லாமல் ரூபன் தன்னை மாற்றிக்கொண்டு என்னை உதாசீனப்படுத்துவது எதனால்? விடை தெரியாமல் விழித்தான்.. அழுகையும் புலம்பலும் இப்பொழுது வாடிக்கையானது கார்த்திக்கிற்கு.. நாட்கள் நகர்ந்தன. அமுதன் ரூபனை நேசிக்க ஆரம்பித்தான்.. ரூபன் தன்னிடம் உண்மையாக இருக்கிறான்.. தன்னை அதிகமாக நேசிக்கிறான் தனமில் அக்கறையாக இருக்கிறான் என்ற எண்ணம் அமுதன் மனதில் தோன்ற ஆரம்பித்தது.. இருவரும் வாழ்நாள் முழுவதும் தொடர முடிவெடுத்தனர்.. அன்று முதல் முறையாக இருவரும் முத்தங்களை பரிமாறிக்கொண்டனர்.. ரூபன் சந்தோஷத்தில் மிதந்தான்.. அமுதனும் தன் ஆத்மா நண்பன் கிடைத்தான் என்று மகிழ்ந்தான்.. இருந்தும் அமுதானால் அந்த கனவை மறக்கமுடியவில்லை.. அந்த கனவை பற்றி இதுவரை யாரிடமும் சொல்லவில்லை.. அந்த கனவு மீண்டும் வரவில்லை.. ஆனால் அவனுக்கு ஒரு நம்பிக்கை.. மீண்டும் ஒருநாள் அந்த கனவு வரும்.. நான் அவனை பார்ப்பேன் என.. அன்று இரவு ரூபன் நேராக சென்று கார்த்திக்கை அழைத்தான்.. கார்த்திக்.. நீ வேற வீடு பாத்துக்கோடா.. நீ சங்கோஜப்படராமாதிரி தெரியுது.. அதுவும் இல்லாம வீட்லயும் கொஞ்சம் உன் ஈசியா பீல் பண்ணறாங்க.. என சொல்ல கார்த்திக் எண்ணற்ற துகள்களாக சிதறினான். கண்களில் கண்ணீருடன்.. ரூபன் ஒரே ஒரு விஷயம் மட்டும் தெரிந்தால் போதும்.. இனி ஜென்மத்துக்கும் நான் உன் வாழ்வில் வரவே மாட்டேன் சொல்லறையா?
கேளுடா?
நான் ஏதாவது உன்னை காய படுத்தினேனா? இல்லை ஏதாவது தவறு செய்தேனா? கொஞ்ச நாளாவே நீ என்னை விட்டு விலகி போயிட்டே ரூபன்... இப்பொழுது நான் உன்மனதில் இல்லை என்பதை எப்பொழுதோ தெரிந்துகொண்டேன்..
அதுவும் இல்லாம வீட்லயும் கொஞ்சம் அன் ஈசியா பீல் பண்ணறாங்க.. என சொல்ல கார்த்திக் எண்ணற்ற துகள்களாக சிதறினான். கண்களில் கண்ணீருடன்.. ரூபன் ஒரே ஒரு விஷயம் மட்டும் தெரிந்தால் போதும்.. இனி ஜென்மத்துக்கும் நான் உன் வாழ்வில் வரவே மாட்டேன் சொல்லறையா?
கேளுடா?
நான் ஏதாவது உன்னை காய படுத்தினேனா? இல்லை ஏதாவது தவறு செய்தேனா? கொஞ்ச நாளாவே நீ என்னை விட்டு விலகி போயிட்டே ரூபன்... இப்பொழுது நான் உன்மனதில் இல்லை என்பதை எப்பொழுதோ தெரிந்துகொண்டேன்.. நானே இங்கிருந்து கிளம்ப முடிவெடுத்து வீடுகூட பாத்துட்டேன் ரூபன்.. வீட்லகூட சொல்லிட்டேன்.. ஏன்னு கேட்டப்ப எனக்கு சௌகரியம் இல்லைன்னு தான் சொல்லி இருக்கேன்.. நீ ஏன் என்னை விட்டு விலகிநேன்னு தெரிஞ்சா போதும் என கண்களில் நீருடன் கேட்க.. ரூபனோ.. கல்மனத்தான் போல.. கார்த்திக் நான் என்னோட் ஒரு பிரண்டு கூட என்னுடைய மீதி வாழ்நாளை கழிப்பதாக முடிவு பண்ணி இருக்கேன். அவனும் ஒத்துக்கொண்டுவிட்டான். இனி என்னுடைய வாழ்க்கை அவனுக்காக மட்டும் தான்.. வேறு யாருக்கும் இடமில்லை என சொல்ல.. சப்த நாடியும் ஒடுங்கி.. கூனி குறுகி.. துக்கத்துடனும்.. இப்படிப்பட்ட ஒரு நபருடன் இத்தனைநாள் இருந்ததை நினைத்து வருத்தப்பட்டு.. அவ்விடத்தை விட்டு விலகினான்.. இந்த பிரிவின் வலியை ரூபன் கண்டிப்பாக உணர்ந்திருக்க முடியாது.. தாங்க முடியாத மனவலியுடன்.. மறுநாள் காலை கார்த்திக் தன் உடைமைகளை

எடுத்துக்கொண்டு தன்னுடைய புதிய வீட்டிற்கு போனான். இந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே முடியாமல்.. சிலையாக இருந்தான் நாள் முழுவதும்.. உண்ணாமல் உறங்காமல்... எதிர்கால பயம் என்னும் கரு மேகங்கள் சூழ இருள் தன் வாழ்வை கவ்வியதாக தோன்றியது கார்த்திக்கிற்கு.. ஐயோ... இதைவிட நான் சாவதே மேல் என தன் வாழ்வை முடித்துக்கொள்ள முடிவெடுத்தான்.. பித்தனைப்போல அலைந்தான். இரண்டு மூன்று நாட்களுக்கு அலுவலகிதிற்கு விடுப்பு எடுத்தான்.. தன் வலி தீரும் வரை அழுதான்.. அழுதான்.. அழுதுகொண்டே இருந்தான்... இந்தவலி தீரும் வலி என்றால் அல்லவோ அவன் அழுகை நிற்கும்.. கடைசியாக ஒருமுடிவுக்கு வந்தவனாய்... சரி என் எண்ணம் தான் ஈடேறவில்லை.. குறைந்தது என்னை பெற்றவருக்காகவாவது நான் இனி வாழவேண்டும்.. மீண்டும் இது போல ஒரு சம்பவம் என்வாழ்வில் இல்லை..இனி வரவிடமாட்டேன் என்ற ஒரு முடிவுடன்.. தன் வாழ்வை தொடர்ந்தான்..
சில வலிகளும் காயங்களும் நமக்கு நாமே உண்டாக்கிகொள்பவை.. இதில் பிறரை குறை கூற முடியாது..ஆனால்.. மற்றவர்களுக்கு வழிகளையும் காயங்களையும் தர யாருக்கும் உரிமைகிடையாது.. படைத்தவனே அந்த உரிமையை எடுத்துக்கொள்ளாத பொழுது..ரூபனை போல உள்ளவர்களுக்கு அந்த உரிமையை யார் தந்தது..? ஆனால் ஒரு விஷயம்.. இப்படிப்பட்ட மனிதர்கள் இவ்வுலகில் இருப்பதால் தானோ என்னவோ.. இந்த கீதா சுருக்கத்தை எழுதினர்..

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுவும் நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
.......
எதை நீ கொண்டுவந்தான் இழப்பதற்கு..
நீ எதை எடுத்தாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது...
....
எது இன்று உன்னுடையதோ நாள் மற்றொருவருடையது
மற்றொருநாள் வேறொருவருடையது.
இதை சொல்லிக்கொண்டு தான் நாம் நம் மனதை ஆற்றிக்கொள்ள வேண்டும்.. அதே நிலை தான் கார்த்திக்கிற்கும்.. இதற்கும் தன்னையே காரணம் என்று எண்ணிக்கொண்டு.. மறுநாள் அலுவலகம் சென்றான்... மனபாரத்தைவிட அவனுக்கு இப்பொழுது குடும்ப பாரம் பெரியதாக தெரிய.. ஒரு புதிய வாழ்க்கையை தொடர்ந்தான்..
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அமுதன் ரூபன் உறவு வளர்ந்தது... இதன் நடுவே நிரஞ்சன் அமுதனிடம் தொடர்ந்து மின்னஞ்சல் மூலம் தொடர்பு வைத்திருந்தான்.. ஒரு நட்பு ரீதியாக.. ஓர்நாள் துரை அமுதனை அழைக்க அமுதனும் ... சொல்லுங்க துரை எப்படி இருக்கீங்க? ரொம்ப நாள் கழிச்சு ஞாபகம் வந்திருக்கு.. என்று கேட்க... அன்றைக்கு ஆனந்தன் கூட இருந்ததால்...என்னால் சரியாக பேச முடியவில்லை..மேலும் வேலைவிஷயமாக நான் US போயிட்டு போன வாரம் தான் வந்தேன்.. அதான் பேசலாம்னு தான் கூப்பிட்டேன் என்றான்.. அமுதனும்.. தாராளமா துரை.. இந்த வார கடைசியிலே சந்திக்கலாமே என்று கூறி அழைப்பை துண்டித்தான். ரூபனிடமும் இதை பற்றி கூற.. ரூபனோ.. அதனால் என்ன டா.. ரெண்டுபேருமா போயி பார்க்கலாம்.. என்று கூறினான். கள்ளம் கபடமில்லாமல் அமுதன் கொஞ்சம் கொஞ்சமாக ரூபனிடம் தன்னை இழந்து கொண்டிருந்தான். அவனை முழுமையாக நம்ப ஆரம்பித்தான். ஒருநாள் அமுதன் ரூபனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்தான்.. தன் வீட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் அவனை அறிமுகம் செய்து வைத்தான். ரூபனும் அமுதனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்தான். அடுத்தநாள் வருவதாக அமுதன் கூற.. அங்கு ஒரே சந்தோஷ மழை பொழிந்துகொண்டிருந்தது.. தான் நினைத்தமாதிரியான ஒரு வாழ்க்கை தன் கைசேர்ந்ததென்று அமுதன் ஆனந்த நதியில் நீராடிக்கொண்டிருந்தான். அன்று இரவு தூக்கத்தில்..

அவன் முன்பு பார்த்த அந்த கனவு தொடர்ந்தது.. அவனும் அந்த யுவனும் நீராடிக்கொண்டிருன்தனர்.. திடீரென்று அந்த யுவன் காணாமல் போனான்.. அமுதன் அவனை தேடிக்கொண்டே கரை ஏறினான்.. ஐயோ அவன் பெயரும் தெரியாதே.. அவன் முகத்தை கூட சைர்யாக பார்க்கவில்லையே.. என்ன செய்வது.. என்ற வருத்தத்துடன் கரையில் நடந்துவந்து கொண்டிருந்தபொழுது.. ஒரு மரத்தடியில் அவன் தன் கால்களில் முகத்தை புதைத்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தான்.. ஒரு தயக்கத்துடனேயே.. அருகில் சென்று அமர்ந்து கொண்டான். சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.. ஒருமுறை அந்த யுவன் தன் தலையை தூக்கி இவன்பக்கம் திரும்பி பார்த்துவிட்டு மீண்டும் தன் தாலியை கால்ககளில் புதைத்துக்கொண்டான். இப்பொழுது அமுதன் சிறிது தைரியத்துடன்.. அவன் முதுகில் கைவைத்து.. நீங்கள் ஏன் வந்துவிட்டீர்கள்? ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறீர்கள்? என வினவ.. அவனோ ஒரு அன்பென்னும் ஆயுதம் என்நெஞ்சை கிழித்துவிட்டது.. அந்த வலியை என்னால் தாங்க முடியவில்லை.. எந்த காரணமும் இல்லாமல் நான் உதசீனப்படுத்தப்பட்டேன்...
நான் மிகவும் நேசித்த ஒருவன் என்னை உயிருடன் கொன்றுவிட்டான்.. நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான். நடைபிணமாய் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.. என்று கூறி அமுத முகத்தை பார்க்க... இப்பொழுது அமுதானால் அந்த யுவனின் முகத்தை நன்றாக பார்க்க முடிந்தது.. தன் மதில்.. இவ்வளவு நல்ல ஒரு மனிதனை.. காயப்படுத்த எப்படி தான் மனம் வந்ததோ.. இவன் நண்பனுக்கு.. இவன் முகத்தில் என்ன ஒரு களை.. என்ன அமைதி.. இவனை இழந்தவன் ஒரு முட்டாள்.. இவனை நேசிக்கப்போகிறவன் மிகவும் கொடுத்துவைத்தவன்.. அதுசரி எனக்கு ஏன் இவன் மேல் இவ்வளவு கரிசனம்.. நான் ஏன் இவனை பற்றியே இவ்வளவு யோசிக்கிறேன்.. என்று நினைத்துகொண்டிருக்கும் பொழுதே.. அந்த யுவன் மறைந்தான்.. இவன் கனவும் கலைக்கப்பட்டது.. அவன் அன்னையின் குரலால்..
இன்னும் என்னடா தூக்கம்.. எழுந்திரு.. வேலைக்கு போக நேரமாகலையா? இன்னும் கொஞ்ச நேரத்திலே வண்டி வந்துவிடும் எழுந்திரு.. இந்த குரலை கேட்டு அவசர அவசரமாக கிளம்பினான்.. செல்லும் முன் அம்மா நான் சாயந்திரம் வருவதற்கு நேரமாகும்.. நான் ரூபன் வீட்டிற்கு போயிட்டு தான் வருவேன் என்றான்.. மாலைக்காக காத்திருந்தான்.. தன் அன்பு நண்பனின் குடும்பத்தை பார்க்க விழைந்தான்.. மாலை ரூபனுடன் அவன் வீட்டிற்கு சென்றான்.. ரூபன் அனைவரிடமும் அமுதனை அறிமுகம் செய்ய.. எல்லோரும் சந்தோஷமாக பேசிக்கொண்டிருக்கும் பொழுது.. தொலைபேசி மணி அடிக்கவே.. ரூபனின் தங்கை பேசுவதற்கு எழுந்து சென்றாள்.. திரும்பி வந்து.. அண்ணா.. கார்த்திக்கிற்கு உடம்பு சரியில்லையாம்.. ரொம்ப சிக்கா இருக்கானாம்.. கொஞ்சம் போயி பார்த்துவிட்டு வரச் சொன்னங்க கார்த்திக்கோட அம்மா..என்று சொல்ல அமுதன் அதிர்ச்சியுடன் ரூபனை பார்க்க.. ரூபன் அதிர்ச்சியில் வாயடைத்து போக.. அவன் பதிலேதும் சொல்லாமல் உறைந்து நிற்க அவன் தங்கையோ.. என்னண்ணா என்ன சொல்ல.. என்று கேட்க ரூபனின் அம்மா இடைபுகுந்து சரின்னு சொல்லேம்மா.. இதென்ன அவன் கிட்ட கேட்கவேண்டி இருக்கு.. இவன் போகலைனா நாம போயி பாக்கலாம்.. என்றார்.. அமுதனின் தலையில் முதல் இடி.. சரி இதை பற்றி இப்பொழுது எதுவும் கேட்க வேண்டாம் என்று நினைத்து.. கஷ்டப்பட்டு அம்மா என்ன சாப்பாடு இன்னிக்கு.. பசிக்குது என்று நிலைமையை சரி செய்ய அமுதன் கேட்கா.. இருப்ப இட்லி வெச்சிருக்கேன்.. கண்ணு அடுப்பிலே வெந்துவிட்டதான்னு பாரு என ரூபனின் தங்கையிடம் சொல்ல.. அமுதன் இதை பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை என்ற நினைப்பில் எதுவுமே ஆகாதமாதிரி ரூபன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான். சாப்பிட்டபின் அமுதன் கிளம்ப.. ரூபன் அவனை பேருந்து நிலையத்தில் அவனை வழியனுப்பிவிட்டு திரும்பினான். அமுதானால் தாங்க முடியவில்லை.. தான் ஏமாற்றப்பட்டதாக நினைத்தான். காலையில் இருந்த சந்தோசம் இப்பொழுது குழப்பமாகவும் தாங்கமுடியாத மனபாரமாகவும் மாறியது.. வீடு செல்லும் வரை அவனால் பொறுத்திருக்க முடியாமல் வழியில் ப்ரொவ்சிங் சென்டரை தேடினான்.. பாதிவழியில் ஒன்று பார்க்க அடுத்த இறக்கத்தில் இறங்கி வேகமாக சென்றான்.. தன்னுடைய ஆர்குட்டை

திறந்து ரூபனின் சுயகுறிப்புக்குள் சென்று கார்த்திக்கின் குறிப்புக்களை தேடினான்.. ஏமாற்றமே மிஞ்சியது.. கார்த்திக்கின் குறிப்புகள் முழுவதுமாக நீக்கப்பட்டிருந்தது.. குழப்பத்துடனேயே வீடு சென்றான்...
உறக்கம் வரவில்லை.. மனபாரம் தான் மிஞ்சியது.. கண்களில் கண்ணீர் தானாக வழிந்தோடியது.. இனி...

இதுவரை நான் கண்டது என் தாகத்தை தணிக்கும் காவேரி நீரல்ல.. கானல் நீர்.. மீண்டும் ஏமாற்றமா? இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? மலர் விட்டு மலர் தாவும் பட்டாம்பூச்சி மூலம் மிகஉயர்ந்த மகரந்தசேர்க்கை நிகழ்கிறது.. ஆனால் இம்மாதிரி ஒருவரை வஞ்சித்து மற்றொருவருடன் உறவாடுபவரால் மனச்சிதைவல்லவா ஏற்படுகிறது.. எந்த நம்பிக்கையில் இனி நானும் என்னைப்போல் உள்ளவர்களும் அடுத்தவரை நம்ப முடியும்? அவர்கள் வார்த்தையை நம்ப முடியும்? பொதுவாகவே.. தான் நல்லவனாக தெரிய அடுத்தவரை குற்றவாளியாக்குவது மிகவும் சாதாரணமான விஷயம். ஆனால் நாம் அந்த குற்றம் சாட்டப்பட்ட நபரின் வார்த்தைகளை கேட்கிறோமா என்றால் இல்லை.. எவன் பொய்யனோ அவனுடைய வார்த்தைகளை அல்லவோ நம்புகிறோம்.. ஏனென்றால் அவனுடைய வார்த்தைகள் இனிக்க இனிக்க இருக்கிறது..

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது..

இதை படித்திருப்போம் ஆனால் சுயநலத்தில் மறந்துவிடுவோம். பொதுவாகவே நமக்கு ஒரு குணம் உண்டு.. அடுத்தவர் ஏதை அதிகமாக நேசிக்கின்றனறோ அதை தான் நாமும் விரும்புவோம். அதை அடைய எத்தனை பொய் சொல்லவேண்டும் என்றாலும் சரி கவலை இல்லை.. இதேபோல் நம்மில் நிறைய பேர் உண்டு. ஒருவனுடன் உறவு வேண்டும் எனில் அவனுக்கு யாருடன் உறவு இருக்கிறதோ அவனிடமே சம்மந்தப்பட்ட நபரை பற்றி தப்பாக கூறி.. இருவரையும் பிரிப்பது.. நான் அனுபவித்ததும் உண்டு.. பார்த்ததும் உண்டு கேட்டதும் உண்டு.. ஒருவரை நம்முடைய நண்பராக தேர்ந்தெடுக்கும் முன் பார்க்கவேண்டிய எதையும் செய்யாமல் பிறகு நொந்துகொள்வதில் என்ன பயன்? பயனில்லை அது தீ நட்பாகும். இதையே தான் நம் திருவள்ளுவர்

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

கூறியிருக்கிறார். இதன் பொருள்:- பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புகொள்பவரும், விலைமகளிரும் கள்வரும் ஆகிய இந்த மூவரும் ஒரே மாதிரியானவர்களே.
அதே போல் தான் ரூபனும் கார்த்திக் யார் என்றே தெரியாது என்று அமுதனிடம் பொய்யுரைத்தான். ஆனால் அந்த நேரம் அமுதனுக்கு ரூபனின் அந்த இனிமையான வார்த்தைகள் தான் மிகவும் பிடித்திருந்தது.. இதில் யாரை குற்றம் சொல்ல முடியும்?
அமுதன் ஒரு நிலைக்கு வர முடியாமல் தவித்தான். அதற்கு ஏற்றார்போல நித்தமும் பலமுறை அழைக்கும் ரூபனும் அவன் வீட்டை விட்டு கிளம்பிய பின் ஒருமுறை கூட இதுவரை அழைக்கவில்லை.. கார்த்திக்கின் குறிப்புகள் ஏன் நீக்கப்படிருக்க வேண்டும்? யார் நீக்கி இருப்பார்கள்? அதே குசப்பத்தில் எப்பொழுது தூங்கினான் என்று தெரியாது.. ஆனால் காலையில் சீக்கிரமே எழுந்துவிட்டான். அன்று காலையும் ரூபனிடமிருந்து அழைப்புவராது போகவே இவே ஒரு முறை தொடர்பு கொண்டான். அழைப்பு செல்லவில்லை.. வீட்டிற்கு தொடர்பு கொண்டான்.. வேலைக்கு சென்றுவிட்டதாக அவனுடைய அம்மா சொன்னார்கள்.. சரி என்று அலுவலகத்திற்கு சென்று அரை நாள் விடுப்பு எடுத்து நேராக ரூபனின் வீட்டிற்கு சென்றான். நல்ல வேலையாக

அவனுடைய அம்மா மட்டுமே அங்கிருந்தார். கார்த்திக்கின் முகவரியை வாங்கிகொண்டு நேராக அவனை பார்க்க சென்றான். அங்கே அவன் பார்த்தது.. அவனாலேயே நம்ப முடியவில்லை.. ரூபன் அங்கிருந்தான்.. அவனுடன் இருந்தது.. தான் அந்த கனவில் பார்த்த அந்த யுவன்.. அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை.. தன் கண்களை கசக்கிக்கொண்டு மறுபடியும் பார்த்தான். ஆம் அதே உருவம்... சற்று பொறுமையாக மறைந்து கொண்டான். அவன் இருந்த வீட்டின் பக்கத்தில் இருந்த ஒரு சிறு சந்திற்குள் சென்றான். பக்கத்தில் சன்னல் இருந்தததால் அவர்கள் பேசுவது தெளிவாக கேட்டது.. ரூபன் கார்த்திக்குடன் கடுமையான வார்த்தைகளில் பேசிக்கொண்டும் திட்டிக்கொண்டும் இருந்தான். இவை அனைத்தையும் வேதனையுடன் அமுதன் கேட்டுக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் ரூபன் அங்கிருந்து புறப்பட்டு சென்றான். அமுதன் நெஞ்சு பாரமாகியது. ரூபன் சென்ற ஒரு 15 நிமிடங்களில் கதவை தட்டினான். கார்த்திக் வந்து கதவை திறந்தான்...

யாரென்று தெரியாமல் குழம்ப.. கார்த்திக்.. தானே.. ஆமாம்... நீங்க....????!!!! உள்ளே போலாமா கார்த்திக்.. என்ற அமுதனின் குரல் கார்த்திக்கை யோசனையிலிருந்து விடிவித்தது.. வாங்க.. என்றவன்.. உள்ளே வந்த அமுதனை உட்கார சொன்னான். மன்னிச்சிடுங்க நீங்க.. யாருன்னு சொல்லவில்லையே? கார்த்திக் எனக்கு உங்களை ரொம்ப நன்றாக தெரியும்....என்னை உங்களுக்கு தெரிய ஞாயமில்லை.. சரி நானே சொல்கிறேன்.. என் பெயர் அமுதன்..அவ்வளவுதான்.. கார்த்திக் அதிர்ச்சியானான். உங்களுக்கு எப்படி என்னுடையவீடு தெரியும்? என்று ஒருவித பயத்திலும் குழப்பத்திலும் கேட்க.. கார்த்திக்.. ஏன் இப்படி பதறறீங்க.. நான் இங்க வந்தது யாருக்கும் தெரியாது.. குறிப்பா ரூபனுக்கு தெரியாது.. போதுமா என்றான். சிறிதே சமாதானம் அடைந்தவனாக கார்த்திக்.. சொல்லுங்க அமுதன்.. எதுக்கு இங்க... என்ற இழுக்க.. உங்களை பார்க்கும் வரை எனக்கும் எதுக்குன்னு தெரியல கார்த்திக்.. ஆனா உங்களை பார்த்த பின்பு தான் நல்ல வேலையாக நான் இங்கே தாமதமாக வரவில்லை என்ற நிம்மதி வந்தது.. ஒண்ணே ஒண்ணு தெரிஞ்சிக்கோங்க கார்த்திக்.. ரூபன் உங்களை விட்டு பிரிஞ்சதுக்கு நான் காரணம் இல்லை.... மேலும் ரூபனிடம் நான் நெருங்கும் முன்பே நான் உங்களை பார்த்திருக்கிறேன்.. என் கனவில்.. என்றவுடன்..தன் உடல் உபாதையையும் மறந்து சிரித்தான் கார்த்திக். என்ன சொல்லறீங்க அமுதன்.. கனவுல பார்த்தீங்களா? ஆமாம் கார்த்திக்.. ஒருமுறை அல்ல இரண்டு முறை.. என அந்த இரண்டு நாட்களை கூற.. கார்த்திக் அதிர்ந்து போனான்... அமுதன் தான் கண்ட இரண்டு கனவுகளையும் கார்த்திக்கிடம் விளக்க ஒன்றும் புரியாமல் முழித்தான் கார்த்திக்.. இதை நம்புவதா? வேண்டாமா என்று.. கார்த்திக் ரூபனை பற்றி இப்பொழுதும் எதுவும் தவறாக கூறவில்லை.. இல்லை அமுதன் அவனுக்கு என்னை பிடிக்கவில்லை.. உங்களை பிடித்திருக்கிறது.. அது தானே உண்மை.. இதில் நான் என்ன செய்ய முடியும்.. என .. அமுதனோ.. இல்லை கார்த்திக்.. ரூபன் என்னிடம் மறைத்திவிட்டான். உங்களை பற்றி கேட்டேன்.. அப்படி யாரையும் தெரியாது என்று சொல்லிய பிறகே நான் தொடர்ந்தேன்... உண்மையை தெரிந்து கொள்ளவே உங்களுடைய முகவரியை ரூபனின் அம்மாவிடமிருந்து கேட்டு வாங்கி வந்தேன் என்று சொன்னான்.. அவங்க அம்மா சொல்லிடுவாங்களோன்னு நீங்க பயப்பட வேண்டாம்.. கண்டிப்பா சொல்ல மாட்டாங்க என்று தைரியம் கூற.. கார்த்திக் நிம்மதியானான்...

அமுதன் முடிவெடுக்க வெகுநேரம் பிடிக்கவில்லை. இந்த அற்புதம் இவன் நினைத்தும் பார்க்காதது. இந்த காலத்தில்.. இப்படி ஒரு சம்பவம் யாரும் சொன்னாலும் நம்பமாட்டார்கள். ஏன், கார்த்திக்கினாலேயே நம்பமுடியவில்லை என்றால் பாருங்களேன். கார்த்திக் இப்பொழுது இருதலை கொள்ளி எறும்பாய் துடித்தான். இப்பொழுது ரூபனுக்கு எப்படி புரியவைப்பது.. நானாக

அமுதனை அழைக்கவில்லை.. பிறகு? அவன் நம்ப வேண்டுமே.. உடல் க்ஷீணித்திருந்தாலும் அமுதனின் வருகை ஒரு மனத்தெம்பை தந்தது என்றே சொல்லவேண்டும். மௌனம்.. மௌனம்.. மௌனம்.. கலைத்தது அமுதன் குரல்.. கார்த்திக் நீங்க டாக்டர் கிட்டே போய் காட்டினீங்களா? என்ன சொன்னார்? வைரல் ஜுரம் என்று சொன்னார். இரண்டு மூன்று நாட்களில் சரியாகும் என்று சொன்னார். அப்பறம் எப்படி தனியாக இருப்ப கார்த்திக். சாரி என்னமோ ஒரு உரிமைல ஒருமைல பேசிட்டேன்.. பரவாயில்லை அமுதன்.. ஏன் இந்த தனிமை.. ஒண்ணு ஷேரிங் ல இருக்கணும்..இல்லைனா குடும்பத்தையாவது இங்க கூட்டிக்கிட்டு வரணும்.. எதுக்காக மத்தவங்களோட தவறால நீங்க கஷ்டம் அனுபவிக்கணும்? கார்த்திக்.. என்னை பொறுத்தவரை.. உண்மையும் நேர்மையும் இருக்கும் வரை தான் அது உறவு.. இதுல எது போனாலும் அது வெறும் வெளிவேஷம். சரி.. என்ன சாப்பிடீங்க? ஏதாவது வாங்கிக்கொண்டு வரணுமா? வேண்டாம் அமுதன்.. மேல் வீட்டு அம்மா இட்லி காலைல குடுத்தாங்க.. கொஞ்ச நேரம் கழிச்சி காஞ்சி வெச்சி தறதா சொல்லிருக்காங்க.. சரி.. கார்த்திக். உன்கிட்டேர்ந்து எனக்கு ஒரு உதவி வேண்டும்.. செய்வாயா? என்ன அமுதன்.. இப்படி திடீர்னு கேட்டா? சரி.. செய்கிறேன். சொல்லுங்க.. கார்த்திக்.. என்னுடைய கனவு நினைவாகும் என்று நான் எய்திர்பார்க்கவில்லை. அதுவும் இவ்வளவு சீக்கிரம். அந்த கனவில் நான் உன்னை கண்ட பொழுது.. நீ எனக்கு கிடைக்க மாட்டாயா என்று நான் நினைத்தேன்... அது கனவு என்பதால் நான் மட்டுமே முடிவு செய்ய வேண்டிய ஒரு விஷயம்.. என் கனவு என் முன்னே நிற்கிறது உயிருடன்.. இப்பொழுது.. அதில் நீயும் சம்மந்தப்பட்டிருப்பதால்.. உன்னுடைய முழு சம்மதம் வேண்டும். எனக்கு அவசரமில்லை... அமுதன். இப்பொழுது என்னால் எதுவும் சொல்ல முடியாது.. எல்லாமே ஆச்சர்யமாகவும் இருக்கிறது... அதிர்ச்சியாகவும் இருக்கிறது.. இப்பொழுது தான் ஒரு வலியிலிருந்து மீண்டு வருகிறேன்.. என்னை மன்னித்துவிடுங்க அமுதன்.. பரவாயில்லை கார்த்திக்... அதற்கு நாம் எவ்வளவு காலம் வேண்டும் என்றாலும் காத்திருப்பேன்...
ஆனால் ரூபனிடம் எனக்கு ஒரு கணக்கு இருக்கிறது... அதை முடிக்க எனக்கு உன்னுடைய உதவி தேவை.. முடியுமா? முடியாதா? கொஞ்சம் கஷ்டம் தான் கார்த்திக்.. ஆனா உன்னுடைய இந்த உதவி உன்னை என்னை போல இன்னொரு நபர் உருவாகாமல் தடுக்கும்.. என்ன சொல்கிறாய்....????. இந்த விஷயத்தில் என் மேலும் தவறு இருக்கிறது.. சரியாக ஆராயாமல் செய்தது என் தவறு. அந்த தவறுக்கு நானே பிராயச்சித்தம் தேட விரும்புகிறேன். அவ்வளவுதான். இதுநாள் வரை அழகும் அன்பும் ஒருசேர கிடைக்கும் என்றிருந்தேன். இப்பொழுதான் புரிந்தது.. அழகும் அன்பும் எப்பொழுதும் ஒன்று சேர முடியாதென்று.. அப்படியே அது சேர்ந்தாலும் இப்பொழுது என்வாழ்வில் நடந்த அற்புதம் போன்றது தான்.. சரி.. நாடகம் இதுதான்.. நான் என்னுடைய நண்பர்கள் இருவர் உதவியுடன் ரூபனுக்கு புரிய வைக்க போகிறேன். ஒருவன் துறை. மற்றொருவர் நிரஞ்சன். ஆனால் ஒன்று.. இனி.. நான் உண்மையிலேலே நேசிக்கும் ஒரே நபர்.. நீ தான் கார்த்திக். அதற்க்கு உன்னுடைய அனுமதி எனக்கு தேவை இல்லை. உன்னால் அதை தடுக்கவும் முடியாது. உனுடிஅய் முடிவு எதுவாயினும் ... நான் சொல்வது.. உண்மையான வாழ்க்கையை பற்றி.. அதற்க்கு நான் சம்மதிக்கிறேன். என்னை பொறுத்தவரை என்னுடைய தேடல் இப்பொழுது தான் நிறைவு பெற்றது...
கார்த்திக் ரூபன் உன்னிடம் கண்டிப்பாக திரும்பி வருவான். அப்பொழுது நீ அவனை ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவ்வளவு தான். அவன் உனக்கு குடுத்த வழியை அவனுக்கு குடுக்க சொல்லவில்லை.. ஆனால் இப்பொழுது அதை அங்கீகரிக்கும் நிலையில் நீ இல்லை என்று சொன்னால் மட்டும் போதும். இவை எல்லாம் எப்பொழுது நடக்கும் என்று என்னால் சொல்ல முடியாது.. ஒரு நாளிலும் நடக்கலாம் ஒரு மாதத்திலும் நடக்கலாம். உன்னிடம் உள்ள இந்த இரக்க குணமும் மேன்மை தன்மையும் அப்பொழுது உன்னை தடுக்காமல் பார்த்துக்கொள். இந்த நாடகத்திற்கு உன்னால் என்னுடைய பக்கம் இருக்க முடியுமா முடியாத என்று மட்டும் சொல்.. அமுதன்.. ஒரு நீண்ட இடைவெளிக்கு பிறகு .. ஒரு பெருமூச்சுடன்.. சரி அமுதன்.. கண்டிப்பாக....

ரொம்ப நன்றி கார்த்திக்.. நான் கிளம்பறேன்.. அப்பறம் நான் இங்க அடிக்கடி வந்தால் உங்களுக்கு ஏதாவது தொந்தரவா இருக்குமா? ... இல்ல அமுதன்.. எப்ப வேணாலும் வரலாம்.. ரூபனுக்கு மட்டும் தெரியாம பாத்துக்கோங்க.. தேங்க்ஸ் கார்த்தி.. அத நான் பாத்துக்கறேன். என்னோட நம்பர் எடுத்துக்கோங்க.. பத்திரம் அமுதன்.. கார்த்திக்.. இந்த ஏழு உலகம்.. விரஜா நதி.. திருப்பாற்கடல் எல்லாவற்றையும் கடந்த ஒரு லோகம் இருந்தால் ஏதுவோ.. அதில் இருந்தான். (பூ லோகம் , புவர் லோகம், சுவர் லோகம்,மக லோகம், ஜன லோகம், தப லோகம், சத்ய லோகம்... இத எதுக்கு சொன்னேன்னா யாரும் கேட்டுவிடக்கூடாதேன்னு தான். ராம் இதில் ஏதாவது தப்பு இருந்தா அதாவது இந்த ஏழு லோகத்தின் பெயர்களில்.. தாராளமா சொல்லலாம்.) இதெல்லாம் உண்மையா? ரூபன் வந்து கத்திய பொழுது ஏண்டா வாழரோம்ன்னு இருந்தது. அடுத்த சில நிமிடங்களில் என் வாழ்க்கைக்கு புது அர்த்தம்.. இதை நம்பலாமா? அதெப்படி.. அமுதன் அவன் கனவில் என்னை பார்த்தான் என்பது.. நம்ப முடியவில்லையே.. ஆனால் அவன் சொன்னதெல்லாம் உண்மை.. நான் என் மனதில் நினைத்த அதே வார்த்தைகள்.. எப்படி...ஒருவேளை.. இதுதான் முடிவோ..இருந்தால் நல்லது தான். எந்தவித எதிர்பார்ப்பும் அவனுக்கும் கிடையாது என்னிடம், எனக்கும் அவனிடம் எந்தவித எதிர்பார்ப்பும் கிடையாது... அதுசரி.. மீண்டும் ரூபன் வந்தால்? சரி.. வரட்டும் பார்த்துக்கொள்ளலாம். அம்மு அக்கா என்ற பெயரில் அமுதனின் எண்ணை பதிவு செய்து கொண்டான்...

கடந்த இருமாதங்களில் கார்த்திக் சந்தோஷப்பட்ட ஒரே க்ஷணம் இதுவாக தான் இருக்கும். அந்த க்ஷீனத்திலும் அவனுள் ஒரு புது தெம்பு வந்தாற்போல ஒரு உணர்வு. கார்த்திக் கதவை மூடியபின். மெதுவாக சென்று கொண்டிருந்த அமுதன்.. கட கடவென ஓடி மேல் வீட்டிற்கு.. அங்கு சென்று கார்த்திக்கின் உடல் நிலையை பற்றி அறிந்து கொண்டு.. ஏதேனும் அவசரம் என்றால் தன்னை தொடர்பு கொள்ள சொல்லி தன்னுடைய எண்ணை கொடுத்துவிட்டு வேகமாக சென்றான். வழியில் ரூபனை தொடர்பு கொண்டான். இப்பொழுது அழைப்பு சென்றது. ஹாய் செல்லம்.. சாரி டா என்னோட போன் கீழே விழுந்துவிட்டது.. கடைல போய் சரி பண்ணிட்டு வந்தேன்.. சரி சாப்பிட போகும் போது கூப்பிடலாமேன்னு தான் இருந்தேன். அதுக்குள்ளே நீ கூப்பிட்டுவிட்டே.. பரவாயில்லை ரூபன்.. நேத்து ராத்திரியே கூபிடுவேன்னு பார்த்தேன். காலைலேர்ந்து ட்ரை பண்ணறேன். இப்பதான் கிடச்சுது... அமுதன்.. சாயந்திரம் நான் உங்க ஆபீஸ்க்கு வரேன் ரெண்டு பேரும் ஒண்ணா டின்னெர் போகலாம்.... இல்ல ரூபன்.. எனக்கு இன்னிக்கு ஓவர் டைம் இருக்கு.. நான் உனக்கு போன் பண்ணறேன்.. சாரி டா.. வீட்டுக்கு கிளம்பும் பொழுது போன் பண்ணறேன்.. ஓகே வா.. ஓகே டா செல்லம்.. சரி நானும் சாப்பிட போறேன்.. ஓகே பாய்.... அழைப்பை துண்டித்துவிட்டு... ரூபன்.. இப்பகூட நீ உண்மையை சொல்லல பாத்தியா? உன் வாயாலேயே சொல்லவெக்கறேன் பாரு... உன்னை உண்மையா நேசித்த கார்த்திக்கையும் ஏமாத்திட்டே.. உன்னையே நம்பி வந்த என்னையும் ஏமாத்திட்டே.. காலம் வரும் ரூபன்.. அதுவரை நீ உன் விளையாட்டை விளையாடு... என்று எண்ணிக்கொண்டே.. துரையை அழைத்தான். துரை நான் உன்னை சந்திக்கணும்.. முடியுமா? இன்னிக்கு இரவு.. 8 மணிக்கு.. எனக்கு 2 ஹெர் ஓவர் டைம் இருக்கு முடிச்சிட்டு வரேன்.. ஆனா கண்டிப்பா நான் உன்னை இன்னிக்கு பாக்கணும். என்ன அமுதன் ஏதாவது அவசரமா? அவசரம்னு இல்ல.. ஆனா முக்கியமானது.. ஒரு உதவி வேண்டும். அது தான். உன்கிட்டே வண்டி இருக்குல.. என்ன பிக் அப் பண்ண முடியுமா? அப்பறம் என்னோட இன்னொரு பிரண்டும் வருவார். பரவாயில்லையா? பரவாயில்லை அமுதன்.. கண்டிப்பா வரேன்... சரி அமுதன் சாயந்திரம் பார்க்கலாம்.. பாய்.. ..அடுத்த அழைப்பு நிரஞ்சனுக்கு... முதல் முறையாக அமுதனிடமிருந்து அழைப்பு வர மகிழ்ந்த நிரஞ்சன்.. அமுதன் சொன்னதற்கு சம்மதம் தந்து 8 மணிக்கு சந்திப்பதாக கூறினான்... மூவரும் 8 மணிக்காக காத்திருந்தனர்...

துரை அமுதனை அவனுடைய அலுவலகத்திலிருந்து பிக் அப் செய்தான். மூவரும் திருவான்மியூர் இரயில் நிலையத்தில் சந்தித்தனர். நிரஞ்சன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். பிறகு அமுதனை நோக்கி மற்ற இருவரும்.. அமுதன் இவ்வளவு அவசரம் என்ன? ஏதாவது பிரச்சனையா?

என ஒருசேர கேட்க.. அமுதன்.. நடந்தவைகளை சொன்னான். மேலும் தன்னுடைய கனவையும்.. கார்த்திக்கை பற்றியும் சொன்னான். இருவரும் ஆச்சர்யத்தில் மூழ்கினர். அமுதன் நீங்கள் நிஜமாகவே கொடுத்துவைத்தவர். உங்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். தேங்க்ஸ். ஆனா.. என்னுடைய நண்பர்கள்ன்னு எனக்கு நீங்க ரெண்டு பேரும் தான் இருக்கீங்க.. சொல்லப்போன.. நிரஞ்ஜனுடன் நான் சாட் பண்ணாத நாளே கிடையாது. ஆனா நாங்க பார்த்துக்கொள்வது இது தான் முதல் முறை. எனக்கு வருத்தம் என்னன்னா கடைசிவரை அவன் என்னிடம் உண்மை சொல்லவில்லை. இப்பொழுதே இந்த விஷயம் எனக்கு தெரிந்ததால் என்னால் தாங்ககூடிய மன கஷ்டத்துடன் வெளியே வர முடிந்தது. ஆனால் கார்த்திக்கை பற்றி நினைக்கும் பொழுது.. என் நெஞ்சே வெடித்துவிடும் போல இருக்கிறது. எத்தனை வலி.. எத்தனை அவமானங்கள்.. கார்த்திக் பாவம் துரை... என்னவோ கார்த்திக்கை நான் சந்திப்பதற்க்காகவோ என்னவோ ரூபனை நான் சந்தித்தது.. அதற்காகவாவது அவனுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஆனால். வலி என்ன என்று அவன் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்க்கு உங்களுடைய உதவி வேண்டும். அதுவரை அமைதியாக இருந்த நிரஞ்சன். அமுதன். நீ சொல்வதெல்லாம் உண்மை. அவனுக்கு வலியின் தன்மையை உணர்த்த வேண்டும். ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தில் நேரிடையாக சொல்லிவிடுவது நல்லது... நிரஞ்சன்.. நீங்க சொல்லறது சரி தான்..ஆனால் அதனால் கார்த்திக்கு பிரச்சனை அதிகமாகும். எனக்கும் அவன் பிரச்சனை கொடுக்க நேர்ந்தால்? ... நிரஞ்சன் அமுதன் சொல்லறது சரிதான். அமுதனுக்கு இந்த விஷயம் தெரியும்ன்னு ரூபனுக்கு தெரியாது. அப்பறம் எப்படி சொல்லமுடியும். ஏற்கனவே ரூபன் கார்த்திக்கை ரொம்ப படுத்தறான்... அப்பறம் கேட்கவே வேண்டாம்..

சரி அமுதன் என்ன செய்வதாக உத்தேசம்? என நிரஞ்சன் கேட்க.. துரை உனக்கு ஏதாவது தோணறதா...இது அமுதன்.. அதான் யோசிக்கிறேன் அமுதன்.. சரி நாம எல்லாரும் ஒருதடவை கார்த்திக்கை சந்தித்து பிறகு ஒரு முடிவுக்கு வரலாமே..துரை சொல்ல நிரஞ்சன் ஆமோதிக்க அமுதனும் உடன் பட்டான். சரி எப்படி ரூபனை அங்கு வராமல் தடுப்பது...

நான் அவனை நாளை மாயாஜால் வர சொல்லிவிடுகிறேன். ஏதாவது ஒரு காரணம் சொல்லி கொஞ்சம் லேட்டா போகிறேன்.. ஆனா... துரை நியர் பை எங்கயாவது என்னை ட்ரோப் பண்ண முடியுமா? நோ ப்ரோப்லேம் அமுதன்.. சரி எத்தனை மணிக்கு? நாளை மதியம் நான் உங்க ரெண்டு பேருக்கும் போன் பண்ணறேன்... ஓகே வா.. ஷோர்.. என இருவரும் சொல்ல.. நிரஞ்சன்.. வாழ்த்துக்கள் அமுதன்.. என.. உண்மையிலேயே நான் தான் அதிர்ஷ்டசாலி.. நல்ல நண்பர்கள்.. கைகூடிய என் கனவு என எல்லாம் ஒருசேர கிடைத்திருக்கிறது.. என்னுடைய ஒரே பயம்.. இவை யாவும் நிலைக்க வேண்டும் என்பது தான்...கடவுள் ஒரு கதவை மூடினால் வேறொரு கதவை திறப்பார் என்பார்கள்.. ஆனால் எனக்கு இரண்டு கதவை திறந்திருக்கிறார்.... என உணர்ச்சிவசப்பட.. துரையோ.. அமுதன்.. நாம நேர்மையா இருக்கிறவரைக்கும்.. கஷ்டம் வந்தாலும் பகிர்ந்து கொள்ள நம்முடன் ஆட்கள் இருப்பார்கள்.. என்னை பொறுத்தவரை உணர்ச்சிகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் கொடுக்க கற்றுக்கொண்டால் மற்றவரை காயப்படுத்தும் எண்ணமே வராது.... உண்மை.. முற்றிலும் உண்மை துரை... என நிரஞ்சன் சொல்லி.. பலமுறை பலரால் நோகடிக்கப்பட்டு.. பிறகே.. சரி வாழ்க்கையில் வருவதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் தன்மையை வளர்த்துக்கொண்டு வருகிறேன்...இப்பொழுது என்னிடம் தேடல் இல்லை.. வலிகள் இல்லை..என.. அமுதனும் துரையும்.. நிரஞ்சன்.. நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்... என்று கூற.. அமுதன்.. சரி நான் புறப்படுகிறேன்.. நாளை போன் செய்கிறேன் என்று கூறி கிளம்பினான். துரையோ.. அமுதன் நான் ட்ராப் பண்ணறேன் இரு என்று சொல்லி.. அனைவரும் திருவான்மியூர் இரயில் நிலையத்தை விட்டு கிளம்பினர்... அமுதன் துரையிடம்.. துரை.. வேற வழியில போங்க..ஏன்னா ரூபன் பார்த்துவிட அதிக சந்தர்ப்பங்கள் இருக்கு.. என்று சொல்ல.. வேறுவழியை நோக்கி செல்ல ஆரம்பித்தான்....வழியில் அமுதானால் அவன் கண்ட காட்சியை அவனாலேயே நம்பமுடியவில்லை.. இப்படியும் நடக்குமா? மை god .. என... என்ன ஆச்சு

அமுதன்... யாரு..? துரை அங்க பாருங்க..அவங்கள நல்ல பாத்துக்கோங்க அப்பறம் சொல்லறேன். .. கொஞ்சம் வேகமா...ப்ளீஸ்.. துரை அவர்களை பார்த்துக்கொண்டே.. வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினான்...அமுதன் வாயடைத்து வருவதை பார்த்த துரை.. யாரது அமுதன்? அமுதன்... சாரி துரை.. என்ன கேட்டீங்க? போச்சுடா? யாரதுன்னு கேட்டேன்....
வேற யாரு துரை... ரூபன் தான்... ஏதோ ஒரு பொண்ணோட கை கோத்துண்டு என்னம்மா நடந்து போறான் பாரு.. என்னது.. ரூபனா?.. துறையே கொஞ்சம் அதிர்ச்சி அடைந்தான். நல்ல பார்த்தாயா அமுதன்.. நல்லா தெரியும் துரை.. அவன் தான்.. ஆனால் அந்த பெண் தான் யாருன்னு தெரியல.. கொஞ்சம் ஓரமா நிறுத்தேன்.. ஒரு கால் பண்ணனும். யாருக்கு.. ரூபனுக்கா? ஆமாம் துரை.. ஹாய் டா.. எங்க இருக்கே? இப்ப தான் நான் ஆபீசெலேர்ந்து கிளம்பினேன். அது தான் உன்னை பார்க்கலாமேன்னு தான் கூப்பிட்டேன்..மைக்கை ஆன் செய்தான். இல்லடா.. நான் இப்போ அங்க இல்ல.. என்னோட ஒரு ப்ரிண்டோட கோட்டுர்புரத்திலே இருக்கேன்... நாளைக்கு காலையிலே பாக்கறேண்டா.. ஓகே.. பாய்.. அமுதனின் பதிலுக்கு கூட காத்திராமல் அழைப்பை துண்டித்தான் ரூபன்.. துரையால் நம்ப முடியவில்லை... "இப்படியும் சில மனிதர்கள்" வேறென்ன சொல்லமுடியும்.. நல்லவேளை அமுதன்.. ஒருவிதத்திலே நீங்க குடுத்து வச்சிருக்கே.. இல்லைனா..இதெல்லாம் இப்படி வெட்ட வெளிச்சமா பாக்கற சந்தர்ப்பம் கெடச்சிருக்காது.. சரி வா.. இன்னும் எத்தனை பேரோ...கடவுளுக்கு தான் வெளிச்சம்.. சரி வா அமுதன் போகலாம்.. இருவரும் அங்கிருந்து கிளம்பினர்... அமுதனின் மனம் மிகவும் பாரமாக இருந்தது.. தூக்கமே வரவில்லை.. கார்த்திக்கை அழைக்க மனம் விழைந்தது.. ஆனால் ஏதோ ஒன்று தடுத்தது.. சரி நாளை காலை பேசிக்கொள்ளலாம் என்று கண்ணை மூடும் பொழுது... கார்த்திக்கின் மேல் வீட்டு அம்மாவிடமிருந்து அழைப்பு.. தம்பி.. அமுதன் தானே பேசறது.... ஆமாம்மா.. என்ன விஷயம்? ஏதாவது அவசரமா? ஆமாம் தம்பி.. கார்த்திக்கு திடீர்னு காய்ச்சல் அதிகமாயிடிச்சு..டாக்டர் கிட்டே என் வீட்டுகாரர் தான் கூட்டிக்கிட்டு போனாரு.. அது தான் சொல்லலாம்னு கூப்பிட்டேன்.. காலைல ஒரு தடவ வந்து பாத்துட்டு போப்பா.. என்றார்.. சரிம்மா.. என்றவன்.. என்ன செய்வது.. அவன் அங்கே தனியா இருக்கிறான்... நமளாளையும் தினம் போறது..இப்போ கொஞ்சம் ப்ரோப்ளேம்.. சரி என்று நேராக அவன் அம்மாவை அழைத்தான். அம்மா... அம்மா.. என்னடா.. இந்த நேரத்திலே.. என்ன வேணும்? ஒரு நிமிஷம் வாயேன்.. என்ன சொல்லு.. இங்க வாம்மா.. தொல்லைடா உன்கூட.. இரு.. என்ன சொல்லு.. அம்மா என்னோட ஒரு பிரண்டு தனியா இருக்கான்.. அவனுக்கு வைரல் பீவர்மா.. கூட யாரும் இல்ல.. இப்ப தான் அவங்க ஹவுஸ் ஓனர் கூப்பிட்டு சொன்னாங்க ஜூரம் திடீர்னு ஜாஸ்தி ஆயிடுத்துன்னு.. இங்க கூப்பிட்டுகிட்டு வந்துவிடட்டுமா..
அவங்க சொந்த ஊரு.. கோவில்பட்டி.. இங்க தனியா இருக்கான்.. என்று சொல்ல.. என்னடா இது.. உங்கப்பாகிட்ட யாரு வாங்கிக்கறது... ஏம்மா.. நான் தனியா இருந்து யாராவது இப்படி நெனச்சா உனக்கு எப்படி இருக்கும்.. நம்மால பொருளால உதவி செய்ய முடியலைனாலும் உடலால செய்யலாம் இல்லையா? என்று கேட்க.. இரு அப்பா கிட்ட கேட்டுட்டு வரேன்.. என்று சொல்லி உள்ளே சென்றவர்.. திரும்பி வந்து...
எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல நீ செய்யறது.. அப்பா எப்படியோ போன்னு சொல்லிட்டார். அவன் யாரோ என்னம்மோ.. உனக்கு எப்படி தெரியும்? இதுவரை நீ அவனை பற்றி எதுவும் சொல்லவில்லையே? திடீர்னு இப்போ எங்கேர்ந்து முளச்சான்...அம்மாவின் இந்த சரமாரியான கேள்விகளால் சற்றே அதிர்ந்த அமுதன்.. அம்மா எல்லாம் நான் நாளைக்கு காலைல சொல்லறேன்.. அப்பா சரின்னு சொன்னாரோன்னோ.. அது போதும்.. தேங்க்ஸ் மா.. என்று அம்மாவின் கன்னத்தை கிள்ளிவிட்டு மகிழ்ச்சியுடன் சென்று படுத்தான். காலையில் நேரமே எழுந்து கார்த்திக்கின் வீட்டை அடைந்தான். அங்கிருந்து அவனை அழைத்துக்கொண்டு வந்து வீட்டில் அவனை படுக்க வைத்துவிட்டு அலுவலகம் சென்றான். கிளம்பும் முன் அம்மாவிடம் அவனை பற்றி சிறிய முன்னுரை எழுதிவிட்டு சாயங்காலம் வந்து சொல்வதாக கூறி சென்றான். கார்த்திக்கை பார்த்தவுடன் அமுதனின் அம்மாவும் மேலே கேள்வி எதுவும் கேட்காமல்

இருந்துவிட்டாள். அலுவலகம் சென்ற அமுதன் துரையையும், நிரஞ்ஜனையும் அழைத்து விஷயத்தை கூறி.. ஓரிருநாட்கள் கழித்து இதை தொடரலாம் என்று கூறினான். துரையை மட்டும் சந்திக்க அழைத்தான். இதன் நடுவே.. ரூபன் அமுதனை அழைத்தான்... ஹாய் டா செல்லம்.. சாரி டா. நேத்திக்கு ஒரு பிரண்டு கூட இருந்தேனா.. அதனால தான் பேச முடியல.. இன்னிக்கு மீட் பண்ணலாமா?.. இல்லை ரூபன்... என்னோட பிரண்டு ஒருத்தன் என்னை பாக்கனும்னு சொன்னான். சாயந்திரம் வர சொல்லி இருக்கேன்.. சோ, என்னால மீட் பண்ண முடியாது.. பை தி வே, யாருக்கோ ஒடம்புசரியில்லைன்னு அன்னிக்கு போன் வந்ததே.. அவங்கள போய் பாத்தியா? இப்போ எப்படி இருக்காங்க? இன்னும் போகலைனா நாளைக்கு போய் பாக்கலாம் என அமுதன் சொல்ல.. இதை சற்றும் எதிர்பாராத ரூபன்.. என்ன.. இல்ல அமுதன் நான் போயிட்டு வந்தனே.. இன்னிக்கு மறுபடியும் போய் பாக்கறேன்.. என்றான். சரி டா.. நான் அப்பறமா கூப்பிடறேன் என்று அவசர அவசரமாக அழைப்பை துண்டித்துவிட்டான்.
அமுதனுக்கு உள்ளூர மகிழ்ச்சி.. ஏற்க்கனவே மாடிவீட்டு அம்மாவிடம் சொல்லிவிட்டே வந்திருந்தான்.. யாராவது வந்து கேட்டால்.. அவனுடைய மிக நெருங்கிய நண்பன் ஒருவன் வந்து அவனுடைய வீட்டிற்கு அழைத்து சென்று விட்டதாக கூறும்படி.. ரூபனும் சொன்னாற்போல் அன்று மாலை கார்த்திக்கின் வீட்டிற்கு செல்ல.. வீடு பூட்டி கிடக்க.. மேல்வீட்டு அம்மாவும் அதையே சொல்ல.. ரூபன் குழம்ப ஆரம்பித்தான். என்னை தவிர இவனுக்கு அப்படி யாரும் இங்கே நெருங்கிய நண்பர்கள் கிடையாது.. யாராக இருக்கும்.. அதுவும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து சென்று பார்த்துக்கொள்ளும் அளவிற்கு யார் அவனுடைய நெருங்கிய நண்பன்? எவ்வளவோ கேட்டும்.. அந்த வீட்டுக்காரம்மா பெயரை தவிர எது சொல்லியும் அவனுக்கு புரியவில்லை.. காரணம் அமுதன் அவன் நினைவில் இல்லை.. காரணம் அமுதன் அங்கு வர சாத்தியத்தை இல்லை என்பது ரூபனின் கணக்கு..குழப்பம் அதிகமாகியது.. அதே எண்ணங்களுடன் வீட்டை அடைந்தான்..
திடீரென துரை வர முடியாத காரணத்தால் அமுதனின் ப்ரோக்ராம் கான்ஸல் ஆகவே சீக்கிரம் வீட்டிற்கு சென்றான். வழியில் ரூபனை தொடர்பு கொண்டான். ஹாய் டா.. எங்க இருக்கே.. வீட்ல தாண்டா இருக்கேன். என்னடா அந்த சிக் ஆள போய் பாத்தியா? நான் வேணா வரேன். ரெண்டு பேரும் போய் பாக்கலாம் என்றான்.. ரூபனோ.. இல்லடா. நான் அங்க போனேன் ஆனா அவன் அங்க இல்லே.. என்று சொல்லும் பொழுது.. ரூபன் நான் மறுபடியும் கூப்பிடறேன்னு சொல்லி அமுதன் அழைப்பை துண்டித்தான் வேண்டுமென்றே.. உள்ளுக்குள் ரூபனை கொஞ்சம் போட்டு பார்க்கவேண்டும் என்று எண்ணம் வர. ரூபனை 10 நிமிடங்கள் கழித்து மீண்டும் அழைத்தான். ரூபனிடம் என்னோட ஒரு பிரண்டுடா.. அன்னிக்கு நாம ஒன்ன லஞ்ச் சாப்பிட்டோம்ல.. அவன் தான். நேத்திக்கு நீ ஒரு பொண்னு கூட கை கோத்துண்டு ரொம்ப நெருக்கமா போறதா பாத்தானாம். அத ஒரு பெரிய விஷயமா என்கிட்டே போன் பண்ணி சொல்லறான்.. என்று கூறி சிரித்தான். எனக்கு தெரியாதா என் ரூபன பத்தி.. என்று சொல்ல.. மேலும் குழப்பம் அடைந்தான் ரூபன். அமுதன் நான் உன்னை மறுபடி கூப்பிடுகிறேன் என்று சொல்லி அழைப்பை துண்டித்தான். ஒன்றின்மேல் இன்னொன்று என அமுதன் குடுத்த இரண்டு அதிர்ச்சியுமே ரூபன் எதிர் பார்க்காதது. ரூபன் வீட்டை அடைந்தான்.. முகத்தில் கோவம்.. வெறுப்பு.. ஏமாற்றம்.. பயம் என எல்லாம் தெரிய.. என்ன ரூபா.. என்ன ஏதாவது பிரச்சனையா? ஒரு மாதிரி இருக்கே.. என அம்மா கேட்க.. ஒண்ணும் இல்லமா... ஆபீஸ்ல கொஞ்சம் வேலைல ஒரு சின்ன ப்ரோப்லேம்.. அதுதான்.. சரி.. நான் தூங்க போகிறேன்.. என்று சொல்ல.. சாப்பிட்டுவிட்டு போடா என அம்மா சொல்ல.. எனக்கு எதுவும் வேண்டாம். ஏதாவது வேண்டும்ன்னா நானே கூப்பிடறேன்.. என்று கூறியவாறே தன் அறை கதவை அடைத்தான். ரூபனின் இந்த செயல் அவன் அம்மாவிற்கு புதியதல்ல.. விட்டுவிட்டார். குழப்பம்.. கலக்கம்.. பயம்.. தூக்கம் வரவில்லை.. வான் செய்த தவறுகள் அவன் கண்முன்னே வந்து சென்றன...தலை சுற்றியது.. காத்த வேண்டும் போல தோன்றியது..

முடியவில்லை.. பயித்தியம் போல இருந்தான் இரவு முழுவதும்.. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான்... விழித்தான் விழித்துக்கொண்டே இருந்தான்..
வெற்றிக்கு சென்ற அமுதன், கார்த்திக்கின் அருகில் சென்று அமர்ந்தான். அமுதனின் அம்மா அப்பொழுதான் அவனுக்கு உணவும் மருந்தும் கொடுத்துவிட்டு சென்றிருந்தார். அமுதன் நேராக தன் அம்மாவிடம் சென்று அமுதன் ரூபனின் குடும்ப நண்பன் என்றும்.. ஒரு சிறு சண்டையால் பேச்சுவார்த்தை இல்லை என்றும்.. அதனால் தான் ரூபனுக்கும் தெரியாமல் தான் அழைத்துவந்ததாக கூறினான். அமுதனின் அம்மாவும்.. ஏதோ சொல்லிட்டேனே தவிர பையன பார்த்தா எனக்கும் பாவமா தான் இருக்கு.. நல்ல பிள்ளையாத்தான் தெரியுது.. மருந்து குடுத்துட்டு வந்தேருக்கேன்.. தூங்கட்டும்.. காலைல கொஞ்சம் தேவல ஆகும் என்றார். அமுதனுக்கு மன நிம்மதி.. மீண்டும் கார்த்திக்கின் அருகில் சென்று அமர்ந்தான். கார்த்திக்கின் தலையை கோதிவிட்டுக்கொண்டே.. என்ன கார்த்தி.. இப்போ எப்படி இருக்கு.. என்று கேட்க.. மிகுந்த ஈனஸ்வரத்தில் .. பரவாயில்லை.. என்றான்.. சரி.. கார்த்தி.. நீ தூங்கு.. காலைல பேசிக்கலாம்.. நானும் போய் சாப்பிட்டுவிட்டு வரேன்னு சொல்லிட்டு விளக்கை அணைத்துவிட்டு கதவை அடைத்துவிட்டு சென்றான். மருந்தின் தாக்கம்மும் உடற் சோர்வும் கார்த்திக்கை உடனடியாக தூங்க வைத்தது... எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு அமுதனும் வந்து படுத்தான்.. நாடு இரோவில் தொலைபேசி ஒலிக்க.. எடுத்து பார்த்தால்.. ரூபன்.... என்ன ரூபன்.. இந்த நேரத்திலே... ஒண்ணும் இல்ல அமுதன்.. மனசே சரியில்லை.. பேசனும் போல இருந்தது.. அதுதான்.. அப்படியா.. ரூபன் எங்க மாமா வந்திருக்கார்.. அவர் என்ரூம்ல இருக்கறதால நான் இப்போ பேச முடியாது.. காலைல பேசிக்கலாம்.. சாரி ரூபன்.. குட் நைட்... என்று சொல்லி அழைப்பை துண்டித்தான். ரூபன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை..அதுவும் அமுதனுடமிருந்து.. அவனுடைய இயலாமை கோவமாக மாறியது... உறக்கம் வராமல் அவனுடயை இரவு ஒரு "விடியாத இரவாகவே"அவனுக்கு...கடைசியாக பொழுதும் விடிந்தது.. ஆம் இந்த விடியல் அனைவருக்கும் தான்..
இரவு முழுவதும் தூங்காததாலும் குழப்பத்தினாலும் ரூபனின் கண்கள் சிவந்திருந்தன.. கட கடவென அலுவலகத்திருக்கு கிளம்பினான். அங்கு.. கார்த்திக் கொஞ்சம் தெம்புடனேயே எழுந்தான். அமுதன் அலுவலகத்திற்கு கிளம்பினான் . அதற்குமுன் தன் அம்மாவிடம் மற்றும் அப்பாவிடம் என்ன, எப்படி பேசவேண்டும் என்று சொல்லிக்கொடுத்துவிட்டு கிளம்பினான். பிக் அப் கார் வந்தது. காரில் அமர்ந்தவாறே ரூபனை தொடர்பு கொண்டான். ரூபன் அழைப்பை நிராகரித்தான். மீண்டும் மீண்டும்.. அமுதன் இதை எதிர்பார்த்து தான் இருந்தாலும்... சரி எவ்வளவு தூரம் போகிறதோ போகட்டும் என்று சொல்லிக்கொண்டு அலுவலகத்தை அடைந்தான். ரூபன் அமுதன் அழைப்பை கடைசியாக துண்டித்ததும் ஒரு அழைப்பு வந்தது.. ஹாய் ஸ்வீடி... சாரி டா.. வீட்ல கொஞ்சம் டென்ஷன் அதுதான்.. சாயந்திரம் கண்டிப்பாக மீட் பண்ணலாம் டா செல்லம்.. ஓகே.. என்று கூறி அழைப்பை துண்டித்தான். அவன் மனமெல்லாம்... கார்த்திக் எங்கே? யார் அழைத்து சென்றிருப்பார்கள்? மீண்டும் மீண்டும் அதே எண்ணம்.. மீண்டும் கார்த்திக் வீட்டை சென்று பார்க்க தோன்றியது.. அலுவலகம் செல்லும் தன் என்னத்தை கைவிட்டு.. நேராக கார்த்திக்கின் வீட்டை அடைந்தான்.. வீடு பூட்டியே இருந்தது.. மேல் வீடும் பூட்டியே இருந்தது... என்ன செய்வதென்று புரியவில்லை.. அமுதனையே அழைக்க எண்ணி.. தொடர்புகொண்டான். இப்பொழுது எதிர்முனையில்.. எந்த பதிலும் இல்லை.. மறுபடியும் தொடர்பு கொண்டான்.. மீண்டும் பதில் ஏதும் இல்லை.. ஒரு குறுஞ்செய்தி.. இனி என்னை அழைக்க வேண்டாம்.. உன்னைப்போன்ற ஒரு ஏமாற்றுகாரனை என் வாழ்விலும் கண்டதில்லை.. இனி நாம் பிரிவது நல்லது.. இதை என் மனமாற சொல்கிறேன்..மீண்டும் என்னை அழைக்கவோ.. சந்திக்கவோ.. முயற்சி செய்ய வேண்டாம்...அமுதன்... இதை படித்ததும்.. ரூபனுக்கு ஏற்க்கனவே இருந்த அதிர்ச்சியோடு மேலும் ஒன்று... ஏன் இப்படி திடீர்னு..? என்ன ஆச்சு.. எல்லாம் அமுதன் வீட்டிற்கு வந்துவிட்டு சென்ற பிறகுதான்... என்னுடைய கனவெல்லாம்...பகல் கனவா...? குழம்பினான். ரூபன் அமுதனுக்கு ஒரு

குறுஞ்செய்தி அனுப்பினான்.. ஒரே ஒருமுறை பார்க்க வேண்டும்.. பேசவேண்டும்...இப்பொழுதே உன்னுடைய அலுவலகத்திற்கு வருகிறேன்..என.. உடனடி பதில்.. வேண்டாம்.. உன்னை பார்க்கவோ, உன்னிடம் பேசவோ எனக்கு இனி விருப்பமில்லை.. அப்படியே சந்திக்க வேண்டும் என்றால்..சனிக்கிழமை மாலை முதலில் எங்கு சந்தித்தோமோ அங்கேயே சந்திப்போம்.. பாய்... ரூபன் அதிர்ந்தான்... நாம என்ன தப்பு பண்ணிநோம்ன்னு அமுதன் இப்படி பேசறான்... ஒருவேளை அன்னிக்கு கார்த்திக் வீட்டு கால் வந்ததே... ஒருவேளை... ஆமாம்.. அதுக்கப்பறம் தான் அமுதன் இதுமாதிரி இருக்கான்.. எப்படி தெரிஞ்சிருக்கும்? ஒருவேளை சந்தேகத்தினாலேயே இப்படி பேசறானோ? ... நான் நந்தினிகூட போனத யாரோ பாத்துட்டு சொல்லி இருக்காங்க.. ஆனா அவன் அதை நம்பலன்னு தானே சொன்னான்... என்ன இப்படி கொழப்பறாங்க... ஏதும் புரியாமல் குழம்பிக்கொண்டே எங்கு போவது என்று தெரியாமல் மெதுவாக நடந்தான். இப்பொழுதும் குற்ற உணர்வே இல்லாதவனாகவே இருந்தான். அழகாக தன வாழ்க்கையை திட்டமிட்டான். ஒருபுறம் நந்தினி.. மறுபுறம் அமுதன்.. ஒருவரை பற்றி ஒருவர் அறியாத வண்ணம் பிரித்தாண்டு வாழ எண்ணம்.. இதில் பார்த்தால் அனைவருமே பலிகடா தான்.. ஆனால் அவன் மட்டும் சந்தோஷமாக இருக்கவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேல்.. கார்த்திக்கை அணு அணுவாக சித்திரவதை செய்ததுதான்.. கொடூரத்தின் உச்சம்.. எப்படி ஒருமனிதனால் இப்படி இருக்கமுடியும்.. தன்னுடைய உணர்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத்தை மற்றவர் உணர்வுக்கு கொஞ்சமாவது கொடுத்தால் பிறருக்கு வலி தரும் செய்கைகள் குறையும். சரிதான்...

மற்றவர் பணிகளை பாராட்டி பேசுவதே கூடாது என நினைக்கும் இந்த உலகில்.. இதெல்லாம் கொஞ்சம் அதிகம் தான். அமுதனை தொடர்புகொள்ள பலமுறை முயன்றான். எல்லாம் தோல்வியிலேயே முடிந்தததது.. நிம்மதி இழந்தான்... அங்கோ.. கார்த்திக் கொஞ்சம் கொஞ்சமாக தேறிக்கொண்டிருந்தான். அவன் உடல் நிலையை கருத்தில் கொண்டு அமுதனும் அவனிடம் அதிகமாக பேசாமல்.. ஓய்விலேயே விட்டான்.. இரண்டு நாட்கள் நகர்ந்தன.. கார்த்திக் ஓரளவு குணமானான். இன் தா 4 -5 நாட்களில் அமுதன் வீட்டில் அனைவருக்கும் கார்த்திக்கை பிடித்துவிட்டது.. அவனுடைய அமைதி.. பணிவு.. நிதானம்.. அறிவு..பக்தி.. என எல்லாவற்றிலும் எல்லாரையும் கவர்ந்தான்.. இத்தனை தள்ளமையிலும் அவனுடைய இந்த ஒழுக்கம் தான் இதற்கெல்லாம் காரணம் என்றால் அது மிகையாகாது. கார்த்திக்கும் அமுதனுடைய குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்துவிட்டான். அமுதனின் அம்மாவுன்.. கார்த்தி இரு.. ரெண்டு நாள் கூட இருந்துட்டு.. உடம்ப பாத்துண்டு போ பா.. அங்க போய் தனியா தான இருப்பே..நாளைக்கு சனிக்கிழமை.. வீக் எண்டு தானே.. என்று சொல்ல.. கார்த்திக்கும் உடன் பட்டான்.. இருந்தும் உறவை தக்கவைத்துக்கொள்ளவேண்டுமே என்ற பயம் அவனுள் இருக்கவே செய்தது...

அது ஒரு புதிய எண். யாரென்று தெரியவில்லை. எடுப்பதா.. வேண்டாமா? என்ற குழப்பம். யாருடா அது.. அப்படி பாத்துண்டு இருக்கே.. தெரியலமா.. புது நம்பர் ஆ இருக்கு. எடுத்து யாருனு கேட்கவேண்டியது தானே.. வேஞ்சிண்டு வேடிக்கை பாத்துண்டிருந்தா என்ன அர்த்தம்.? அழைப்பு துண்டிக்கப்பட.. கட் ஆயிடுத்துமா.. திரும்பவும் கூப்பிட்டா பாத்துக்கலாம்.. என்னமோ போ.. யாரு அமுதன்.. ஏன் எடுக்கல.. ரூபனா? இல்ல கார்த்தி.. எனக்கு தெரியல.. புது நம்பரா இருக்கு. சரி கார்த்தி.. சாப்பிடு.. இருவரும் சாப்பிட்டு முடித்தனர்.. இருவரும் அறைக்கு சென்று எதிர் எதிரே அமர்ந்து கொண்டனர்.. கார்த்திக்.. அமுதன்.. நிஜமாவே நான் கனவுலகத்திலே இருக்கநோன்னு ஒரு பிரம்மை. ஒரு வாரத்திலே எவ்வளவு மாற்றங்கள்.. வலிகள்..எத்தனை அன்பு.. பாசம்.. புரியல எனக்கு.. வீணா எதையும் போட்டு மனச வருத்திக்காம ரெஸ்ட் எடு கார்த்தி.. இப்பதான் நம்ம வாழ்க்கை ஆரம்பிச்சிருக்கு. ஆனா.. ஒரு வாரத்துக்கு முன்னாடி இருந்த அமுதனுக்கும் இப்போ இருக்கிற அமுதனுக்கும் நூற்றுக்கு நூறு மாற்றம் உண்டு. இப்பொழுது.. தெளிவாக இருக்கிறேன்.. எனக்குள் ஒரு தைரியம்.. தன்நம்பிக்கை.. எப்போதும் இல்லாமல் எனக்குள் கரைபுரண்டோடும் அன்பு.. எனக்குள் இருக்கும் அமைதி... தெளிவான எதிர்கால பார்வை.. எல்லாத்துக்கும் நீ தான் கார்த்தி காரணம். ஒருவேளை நான் கனவிலும் நினைவிலும் உன்னை பார்க்காம இருந்திருந்தா..

உடைபட்ட உள்ளத்தோடு உலவி வரும் நடை பிணங்களில் நானும் ஒருவனா இருந்திருப்பேன். என்னவோ எல்லாம் பெருமாள் சித்தம்.. இப்பொழுது கார்த்திக்கின் கண்கள் பனித்தது.. எழுந்து வந்து அப்படியே அமுதனை கட்டி அணைத்துக்கொண்டான்.... விஷமாயிருந்த என் வாழ்வில் உயிர் கொடுக்கும் அமுதமாக வந்தே நீ அமுதா.. இப்போவே இப்படியே நான் செத்துவிடவேண்டும்.. ஏன்னா அடுத்த நிமிட ஏமாற்றமும் வலியும்.. என் உயிரை முழுவதும் எடுக்காமல் வதைக்கும் என... இனிமே தாண்டா நாம வாழனும்.. நமக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு.. இன்னும் பல புது உறவுகள் வரும்.. எல்லாத்தையும் நாம பார்க்கணும்.. உண்மையான உறவுன்ன என்னன்னு நாம எல்லாருக்கும் காட்டனும்.. புரியவைக்கணும்.. கார்த்தி நம்மோட எதிர் காலத்தை பற்றி நிறைய பேச வேண்டி இருக்கு... நாம ஒழுங்கா பிளான் பண்ணனும்.. உனக்கு உடம்பு முழுவதும் குணமாகட்டும்.. அப்பறம் பேசிக்கலாம். இன்னும் ஒரு விஷயம் சொல்லணும்.. நம்மை பற்றியது அல்ல...
என்ன அமுதா ரூபனா.. ஆமாம் கார்த்தி.. அவனுக்கு ஒரு பெண் கூடயும் தொடர்பு இருக்கு.. என் கண்ணாலேயே பார்த்தேன். என் பிரண்டு கிட்டே சொல்லி இருக்கேன் விசாரிக்க சொல்லி... சிலையாய் இருந்தான் கார்த்தி.. ஒரு சில அங்க அடையாளங்களை சொல்லி.. இப்படியா இருந்தா அந்த பெண்? உனக்கெப்படிடா தெரியும்?...என கண்கள் விரிய கேட்டன் அமுதன்.. ஒருநாள் அவன் என்ன பாக்க வந்தப்ப இந்த பெண்ணும் கூட இருந்தா.. யாருன்னு கேட்டேன்.. என்கூட வேலை பாக்கறா.. இவளுக்கு ஒரு பாய் பிரண்டு இருக்கான்.. என்னோட பிரண்டு தான் அவன்னு சொன்னான்.. அதுக்கப்பறம் அந்த பெண்ணை இன்னொரு பையன் கூட நிறைய தடவ பாத்திருக்கேன்... ஆனா எப்படி ரூபன் கூட... அது தான் தெரியல.. சரி டா விடு.. அவன் எப்படி வேணும்னாலும் போகட்டும்.. இனி அது அவன் வாழ்க்கை...என்று அமுதன் சொல்ல.. இல்ல அமுதன்.. இதிலே ஏதோ தப்பு நடக்கறா மாதிரி தோணுது... இத இப்படியே விட்டா.. அந்த பொண்ணும் கூட பாதிக்கப்படக்கூடும்.. அட் லீஸ்ட் அதையாவது தடுக்கலாம் இல்லையா.... நீ சொல்லறதெல்லாம் சரி கார்த்தி.. நாம போய் அந்த பெண் கிட்டே எப்படி பேசறது...முதல்ல அவ யாருன்னு தெரியட்டும்.. அப்பறம் பாக்கலாம்... சரி.. நீ ரெஸ்ட் எடுத்துக்கோ.. நான் கொஞ்சம் கடைவரைக்கும் போயிட்டு வரேன்... சரி அமுதா.. என்றவாறே.. படுக்கையில் சரிந்தான்... மனத்தில் பல எண்ணங்கள்.. இன்று ரூபனை சந்திக்கும் பொழுது என்ன பேசுவதென்று.. மேலும்.. இதுவரை ரூபனிடமிருந்து எந்த அழைப்பும் வரவில்லை.. சரி பொறுத்திருந்து பார்க்கலாம்.... வழியில் நடந்து கொண்டிருக்கும் பொழுது மீண்டும் அந்த எண்ணிலிருந்து அழைப்பு வந்தது. இந்தமுறை அவன் அழைப்பை ஏற்றான். மறு முனையில் ஒரு பெண்ணின் குரல்.. ஹலோ.. நீங்க அமுதனா பேசறது..? ஆமாம்.. நீங்க யாறுனு தெரிஞ்சிக்கலாமா? தெரிஞ்சிக்கறதென்ன.. பார்க்கவே பார்க்கலாம்.. எப்ப? எங்க? அது சரி என்னுடைய நம்பரை உங்களுக்கு யார் கொடுத்தது? எங்கிருந்து கிடைத்தது?.. அமுதனின் குரலில் ஒரு படபடப்பு.. அதிர்ச்சி கலந்த ஆச்சர்யம்..பயம்.. என்ன அமுதன் பதரறீங்க.. பதறாதீங்க அமுதன்.. உங்களுடைய ஒரு நண்பரிடமிருந்து தான் கிடைத்தது.. நான் உங்களை உடனடியா சந்திக்கணும்.. எங்க வறீங்க? மேடம்.. நான் உங்களை சந்திக்கிறது இருக்கட்டும்.. என்னுடைய எந்த நண்பன் இந்த நம்பரை உங்களுக்கு தந்தான்? அதுவும் என்னுடைய அனுமதி இல்லாமல் தந்த அந்த நண்பன் யாரென்று தெரிய வேண்டும்.. அதெல்லாவற்றையும் விட நீங்கள் என்னை அவசரமாக சந்திக்க வேண்டிய அவசியம் என்ன..? கொஞ்சம் சொன்னீங்கன்ன நான் வருவதை பற்றி யோசிப்பேன். அமுதன்.. உண்மையை சொல்லனும்னா.. யாரும் எனக்கு தரல.. உங்க பிரண்டு ரூபனுடைய போனிலிருந்து தான் நான் எடுத்தேன். இது ரூபனுக்கு தெரியாது. சொன்னது தான் தாமதம்.. உங்க பெயர்.. நந்தினி. ஒத்.. நீங்க தானா அது.. அப்பா ஒரு 4 நாளைக்கு முன்னால ரூபனோட போனது..நான் தான்.. oh ஓகே ஓகே.. நீங்க எங்கே இருக்கீங்க..? நான் இப்போ அடையார்ல இருக்கேன் அமுதன்..சரி நீங்க அடையார் பஸ் ஸ்டாண்ட் எதிரே இருக்கும் அம்பிகா அப்பளம் கட்டடத்திற்கு வந்துவிடுங்கள்.. நான் இன்னுன் ஒரு மணி நேரத்தில் அங்கே வரேன்.. என்றான்.. அவசர அவசரமாக வீட்டிற்கு

சென்றான். அடையார் செல்வதாக கூறி கிளம்பினான். கார்த்திக்கிடம் நடந்ததை சொன்னான்.. கார்த்திக்கிற்கும் கூட செல்ல ஆசைதான்.. ஆனால் உடல்நலம் தடுத்துவிட்டது.. சொன்ன ஒருமணி நேரத்திற்கு முன்னமே அங்கே சென்றான். இருட்டில் பார்த்திருந்தாலும் ஓரளவு அவனால் யூகிக்க முடிந்தது. நந்தினியும் வந்தாள்.. ஆனால்...
தனியாக இல்லை.. உடன் ஒரு பையன் இருந்தான்... அவளை பைக்கிலிருந்து இறக்கி விட்டு.. காத்திருந்தான். அமுதனும்..சிறிது நேரம் காத்திருந்தான்.. அவர்கள் ஏதோ பேசிக்கொண்டனர்.. சில நிமிடங்களில் அந்த இளைஞன் அங்கிருந்து கிளம்பினான். நந்தினியும் அந்த அம்பிகா அப்பளம் கடைக்குள் நுழைந்தாள். அமுதனை தொடர்புகொண்டாள். அமுதனும் வாசலுக்கு வரும்படி கூறிவிட்டு அங்கே சென்றான். வெளியே வந்த நந்தினியிடம்.. ஹாய் Ms நந்தினி.. அமுதன்.. என்னை எப்படி தெரியும்.. அன்னிக்கு ரூபனும் நீங்களும் நடந்து போகும் பொழுது பார்த்தேன்.. சரி.. இங்கிருந்து பேச வேண்டாமே.. ஏதாவது சாப்பிட்டுக்கொண்டே பேசலாமே என அமுதன் சொல்ல.. இருவரும் எதிரே இருந்த ஒரு ஹோட்டேலுக்குள் சென்று அமர்ந்தனர்.. சொல்லுங்க நந்தினி.. என்ன திடீர்னு.. எப்படி ஆரம்பிக்கறதுன்னு தான் தெரியல அமுதன்.. ரொம்ப டெலிகேட் ஆ இருக்கு.. உனக்கும் ரூபனுக்கும்... எங்க ரெண்டு பேருக்கும் என்ன உறவுன்னு தெரியனும் அவ்வளவு தானே.. எஸ். அதுக்கு முன்னாடி நான் சில விஷயங்கள் என்னை பற்றி சொல்ல வேண்டி இருக்கு... எதை நீங்க எப்படி வேணும்னாலும் எடுத்துக்கலாம்.. ஆனா அது உண்மை.. தான் இருந்த மனநிலை.. இப்பொழுது தான் இருக்கும் மனநிலை..தன்னுடைய முடிவு.. (அதாவது திருமண பந்தத்தில் நுழைவது) காமம் இல்லாத ஒரு காதல்...என எல்லாவற்றையும்.. இதில் எந்த இடத்திலும் ரூபனை பற்றியோ கார்த்திக்கை பற்றியோ அவன் சொல்லவில்லை... இது மாதிரியான விஷயங்களை நண்பர்களிடம் சொல்லவே முடியாது.. அப்படி இருக்கையில் ஒரு பெண்ணிடம்... நம்ப முடியவில்லை... என்னாலும் தான்.. ஆனால்.. ஒரு சில நேரங்களில் இது மாதிரியான விஷயங்கள் நாம் எதிர் பார்ப்பது போல நடப்பதில்லை என்பது கசப்பான உண்மை.. இவை எல்லா வற்றையும் கேட்டுகொண்டிருந்த நந்தினி.. அமுதன் உண்மையை சொல்லனும்னா... நான் இதை எதிர்பார்க்கல.. எந்த ஒரு ஆம்பளையும் இவ்வளவு வெளிப்படையா பேச மாட்டான். நீங்க இவ்வளவு வெளிப்படையா எல்லாத்தையும் சொன்னதே உங்கள் மேல எனக்கு ஒரு நம்பிக்கை வறது. என்னை பொறுத்தவரை.. உண்மை என்னன்னா எல்லா பெண்களும் இதை அவ்வளவு சாதாரணமா எடுத்துக்க மாட்டாங்க.. படிச்சவங்களா இருந்தாலும் சரி.. படிக்காதவங்களா இருந்தாலும் சரி... அப்பா உங்க நேர்மையை யாரும் பார்க்க மாட்டாங்க அமுதன்.. இதை ஒரு மன்னிக்க முடியாத குற்றமாவே பாப்பாங்க... ஏன் இந்த விஷயம் என்னோட வாழ்விலே இருக்குன்னு ஒரு சந்தேகத்திலே தான் நான் உங்களை பார்க்க அழைத்ததே..
முன் பின் தெரியாத ஒரு ஆள்கிட்டே இவ்வளவு நேர்மைய இருக்கிற நீங்க நாளைக்கு கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணு கிட்டே இப்படி இருப்பீங்களா?
கண்டிப்பா.. அந்த பொன்னும் உங்களமாதிரி பொறுமையா எல்லாத்தையும் கேட்டா... அரை குறையா கேட்டுட்டு முடிவெடுக்கறதால தான் எல்லா குழப்பங்களும் வருது... நீங்க சொல்லரா மாதிரி.. இத எந்த பொண்ணுகிட்டே சொன்னாலும்.. போடா போட்டன்னு சொல்லிட்டு போயிடுவா.. ஆனா..இது காமம் சம்மந்தப்பட்ட விஷயம் இல்ல மனசு சம்மந்தப்பட்ட விஷயம்ன்னு அவங்களால புரிஞ்சிக்க முடியாது.. செக்ஸ் தான் வேண்டும்னு நினைச்சா.. யாருக்கும் தெரியாம எத்தனை பேர் கூடவேண்டுமானாலும் யார் வேணும்னாலும் போகமுடியும். ஆனா.. இது அந்த தேடல் இல்லை. எல்லா விஷயத்தையும் பொண்டாட்டிகிட்டே சொல்லிவிடமுடியாது.. அதுக்கு நம்மை புரிஞ்சிக்கிட்டே ஒரு ஆத்மா வேண்டும்.. அது தான் என்னோட தேடல்.. மத்தவங்கள பத்தி எனக்கு தெரியாது.. யார்.. ஆனா சந்தர்ப்பம் கிடைத்தால் இதை என் வருங்கால மனைவிக்கு கண்டிப்பாக சொல்லுவேன்..அய்யய்யோ.. பாருங்க.. நீங்க என்கதையை கேட்டு உங்க விஷயத்தை மறந்துட்டீங்க..
பரவாயில்லை அமுதன்.. உங்களுடைய தெளிவு நெஜமாவே எனக்கும் நிறைய கேள்விகளுக்கு

பதிலை தருகிறது.. சரி.. ரூபனும் நீங்களும் எந்த நிலையில் இப்பொழுது...?
உண்மைய சொல்லப்போனால் கடந்த 3 - 4 நாட்களாய் நான் அவனுடன் பேசுவது கூட கிடையாது..
ஏன்?
ஒரு தடவ இல்ல பலதடவ உண்மையை மறைத்துவிட்டான்.. அதை பற்றி நான் கேட்கும் பொழுதும் கூட.. நந்தினின்னு ஒரு பெண் அவனுடைய வாழ்வில் இருக்கிறாள் என்பதே எனக்கு ஒரு வாரமா தான் தெரியும்.. நான் அவனிடம் உண்மையா இருக்கனும்ன்னு நினைக்கிற அவன்.. என்னிடம் உண்மையா இல்ல..
உங்களுக்குள்..
புரியுது.. இல்ல நந்தினி.. சத்தியமா எங்களுக்குள்ளே எதுவும் இல்ல.. வெறும் பேச்சோடு சரி.. தேன்க் காட்...
ஆனா..
ஆனா என்ன அமுதன்.. வேற ஏதாவது.. யாராவது..
ஆமாம் நந்தினி.. அவன் பெயர் கார்த்திக்.. அவனுடைய ஊர் பையன் தான்..
கார்த்திக்கா... நான் அவன பார்த்திருக்கேன்.. அவனுமா...?
ஆமாம். ஆனா.. ரூபன் எனக்காக அவனையும்.. எதுக்காக என்னையும் மனதளவிலே காயப்படுத்தினான்னு தெரியல.. ஒரு உண்மைய சொல்லி இருந்தா.. யாருக்கும் எந்த காயமும் இருந்திருக்காது..
கார்த்தி கூட ஏதாவது..
அது அவனோட ரொம்ப காலமா இருக்குன்னு நினைக்கிறேன்.. ஐ ஆம் சாரி நந்தினி..
இட்ஸ் ஓகே அமுதன்..
இட்ஸ் ஓகே அமுதன்..
இப்போ நானும் கார்த்தியும் ஒண்ணா இருக்கறதுன்னு முடிவு பண்ணி இருக்கோம். எங்களுக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு.. இன்னும் உறவுகள் வரும்... சோ.. எங்களால முடிந்தவரை எல்லோரிடமும் உண்மையா இருக்கணும்னு முடிவு பண்ணி இருக்கோம். இன்னிக்கும் ரூபனை கடைசியா ஒருமுறை பார்த்து என்னுடைய முடிவை சொல்லிவிட்டு போக வர சொல்லி இருக்கேன்..
எத்தனை மணிக்கு? 4 :30 மணிக்கு.. கொட்டிவாக்கம் பீச்ல...
ஒண்ணு பண்ணுங்க அமுதன்.. நீங்க கார்த்திக்கை கூட்டிகிட்டு அங்க வந்திடுங்க.. நானும் அங்க வரேன்.. அது சரி.. ரூபன் அங்க வரதா கன்பிரம் பண்ணினானா?
இல்லை..
அப்பா நீங்களே அவனை கூப்பிட்டு கன்பிரம் பண்ணிடுங்க அமுதன்.. எனக்காக..
அப்பா.. நீங்களும் அங்க வரப்போறீங்களா?
ஆமாம் அமுதன்.. நானும் தான்..உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா?
சேச்சே அதெல்லாம் இல்லை..
அப்பா சரி.. அமுதன்.. உங்களோட இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யபோகிறேன்னு தெரியல.. ஆனா.. உண்மையா நான் உங்களுக்கு ஒரு நல்ல தோழியா இருப்பேன்.
கண்களில் கண்ணீருடன்.. அமுதன்.. ரொம்ப தாங்க்ஸ் நந்தினி..
சரி அமுதன்.. பீச்ல மீட் பண்ணலாம்.. ஓகே..
ஓகே நந்தினி.. சி யு...
அவசர அவசரமாக வீட்டிற்கு ஓடினான் அமுதன்.. சென்று.. கார்த்திக்கிடம் எல்லாவற்றையும் கூறினான்.
பாத்தியா அமுதன்.. நாம நினச்சா மாதிரி அந்த போனுக்கு உதவி செய்ய முடியுது..
அதுசரி கார்த்தி.. இப்ப உன்னால அவ்வளவு தூரம் வர முடியுமா? அம்மா என்ன சொல்லுவாளோன்னு தெரியல..கொஞ்சம் இரு.. நாம போய் அம்மா கிட்ட சொல்லிட்டு வரேன்.. நீ

ரெடிஆ இரு..
சரி அமுதா..
ஒருவழியாக அம்மாவிடம் அனுமதி பெற்று.. கார்த்திக்கை கூட்டிக்கொண்டு கொட்டிவாக்க பீச்சை அடைந்தான்.. பின்னாலேயே நந்தினியும் ஒரு ஆட்டோவில் வந்திறங்கினாள். அந்த ஆட்டோவை அங்கேயே வெயிட் பண்ண சொன்னாள்.
ஹாய் அமுதன்.. ஹாய் கார்த்திக்..
கார்த்தி என்ன ஞாபகம் இருக்கா?
இருக்கு.. நான் உங்கள பாத்திருக்கேனே..
சரி.. ரூபன் கிட்டே கன்பிரம் பண்ணினீங்களா அமுதன்..
வரேன்னு சொல்லிட்டான் நந்தினி..
ஓகே.. சரி நானும் கார்த்தியும் ஆட்டோவிலேயே இருக்கோம்.
நீங்க பேசிண்டே இருங்க.. நாங்க ரெண்டு அப்பறம் வருகிறோம்..
ஓகே நந்தினி..
அமுதன்.. தான் முதல் முதல் ரூபனை பார்க்க அமர்ந்திருந்த இடத்திலேயே அமர்ந்திருந்தான்..
பத்து நிமிடங்கள் கழித்து ரூபன் வந்தான்..
ஹாய் அமுதா.. கையை நீட்டினான்.. அமுதனும் பெயருக்காக கை குலுக்கிவிட்டு.. சொல்லுங்க ரூபன். எதுக்காக என்னை வர சொன்னீங்க.. நான் தான் உங்க கிட்டே சொல்லிட்டேனே.. இனிமே இதெல்லாம் வேண்டாம்னு..
என்ன ஆச்சு அமுதன்.. ஏன் இப்படி எல்லாம் பேசற..
என்ன ரூபன் எதுவுமே தெரியாத மாதிரி பேசறீங்க..
என்ன சொல்லற.. அமுதன்.. எனக்கு எதுவுமே புரியல..
புரியாது ரூபன்.. மத்தவங்களோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கத் தெரியாதவங்களுக்கு இதெல்லாம் புரியாது. எல்லாம் சுயநலம்..
அமுதன் புரியறமாதிரி சொல்லறயா?
சொல்லரதென்ன ரூபன் நீங்களே அங்க திரும்பி பாருங்க..
ரூபன் திரும்ப.. கார்த்திக்கும் நந்தினியும் ஆட்டோவிலிருந்து இறங்கி வர..
செயலிழந்து நின்றான்.. ரூபன்.
உன்னோட ஆட்டம்.. சாரி சாரி.. உங்களோட ஆட்டம் முடிஞ்சிடிச்சு..
நந்தினி: -என்ன ரூபன்.. இப்படி மலைச்சி போய் நிக்கற.. உன்ன நம்பினேன் பாரு.. என்ன சொல்லணும்.. எவ்வளவு பொய்.. என்ன ஒரு சுயநலம்.. உன்ன நம்பினதுக்கு எனக்கு நல்ல பாடம் கத்து குடுத்துட்டே ரூபன். சத்தியமா இத என்னால வாழ்நாள் எல்லாம் மறக்க முடியாது.. ஒரு உண்மை நீ என்கிட்டே சொல்லி இருக்கியா? நல்லவேளை உன்னை கல்யாணம் பண்ணிண்டு கஷ்ட படாம இருந்தேன்..
பாத்தியா ரூபன்.. நீ மறைக்கணும்னு நெனைச்சாலும் உண்மை ஒருநாள் கண்டிப்பா வெளியே வரும்னு.. இனிமேயாவது யார்கிட்டேயும் பொய் சொல்லாதே.. உண்மையை மறைக்காதே..
அமுதன்:- ரூபன்.. இனிமே நாங்க ஒண்ணா நண்பர்களா இருக்கறதா முடிவு செஞ்சிட்டோம்.. உனக்கு ரொம்ப நன்றி.. உன்னால தான் எனக்கு கார்த்திக்கும் , இப்ப நந்தினியும் கிடைச்சிருக்காங்க..
உன்னை நம்பினதுக்கு நீ என்ன ஏமாத்தினே.. உன்னை நாடினதுக்கு எனக்கு இவங்க என் வாழ்க்கைல கிடைச்சிருக்காங்க..
கார்த்தி.. எதுவும் பேசாமல்.. வருத்தத்துடன் ரூபனை பார்த்தவாறே அமுதனுடனும்.. நந்திநியுடனும் அங்கிருந்து நகர்ந்தான்..
ரூபனுக்கோ சுனாமியில் அகப்பட்ட கப்பல் போல நிலையிழந்து.. செயலிழந்து.. அவர்கள் செல்வதை தனி மரமாய் நின்று கொண்டு பார்த்துக்கொண்டிருந்தான்..

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.. தன்வினை தன்னை சுடும்..

முற்றும்...